www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல்: 35 | மார்கழி - 1992 | அன்பளிப்பு: ரூபா 5.00


# சிறீலங்கா அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என்ன?

இப்போராண்டில் (1992) சிங்களப் படைகள் பெருத்த உயிரிழப்பையும், போர்த்தளபாட இழப்பையும் சந்தித்துவிட்டன. குறைந்தது 1380 சிங்களப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 1285 ஆயுதங்களும், ஏறக்குறைய 7 இலட்சம் ரவைகளும், பெருந்தொகையான வெடிப்பொருட்களும் சிங்களப் படையிடமிருந்து எம்மால் கைப்பற்றப்பட்டன (டிசெம்பர் 24 வரை).

சிங்களப் படைகள் சந்தித்த இப்பேரிழப்புகள் அவர்களின் போரிடும் உறுதியைச் சீர்குலைத்துவிட்டன என்பது, உலகறிந்த உண்மை.

ஆனாலும், போரை நிறுத்தச் சிறீலங்கா அரசு விரும்பவில்லை போர்மூலம் சீர்குலைந்த போரிடும் உறுதியைப் போர்மூலமே சீர்செய்ய, சிங்களப் படைத்துறைத் தலைமை முடிவெடுத்துள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில், தான் இராணுவ மேல் நிலையை எய்தவேண்டும் என்ற நோக்கத்தையே சிங்கள அரசு தொடர்ந்தும் கொண்டிருக்றகின்து.

எனவே, பிறக்கப் போகும் புதிய ஆண்டில் (1993) போரை மேலும் தீவிரமாக்க சிங்களத் தளபதிகள் தீர்மாணித்துள்ளனர்.

இதற்காக புதிய போர்முறைத் திட்டமொன்றைச்சிங்களப் படைத்துறைத் தலைமை தீட்டியுள்ளது.

இப்போர்முறைத் திட்டம் இரண்டு பிரதான இராணுவ நோக்கங்களைக் குறியாக வைத்து வரையப்பட்டுள்ளது.

ஒன்று, போரிடும் உறுதி சீர்குலைந்ததால் ஈடாட்டம் கண்டுள்ள சிங்கள இராணுவ இயந்திரத்திற்குப் புத்துயிர் ஊட்டிப் புதிய பலத்தைக் கொடுப்பது.

இரண்டு, தற்போது புலிகள் பெற்றிருக்கும் இராணுவ மேல் நிலையைத் தகர்த்தெறிவது.

அதேசமயம் இப்போர்முறைத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம், திரு. பிரேமதாசா அவர்கள் ஒரு அரசியல் வெற்றியையும் அடைய எத்தனிக்கின்றார்.

அதாவது, இவ்விரு இராணுவ நோக்கங்களும் வெற்றிகரமாக எய்தப்படுமாயின், சிங்களப் படைகள் போர்க்களத்தில் இராணுவ மேல் நிலையை அடைந்துவிடும். இந்த இராணுவ வெற்றியில் சிங்கள தேசம் குதூகலித்திருக்கும் வேளையில், சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தித் தான் வெற்றிவாகை சூட, பிரேமதாசா எண்ணுகிறார்.

இத்தகைய இராணுவ – அரசியல் நோக்கங்களை, அடைந்து கொள்வதற்காக, வரும் ஆண்டில் போரைத் தீவிரமாகவும் கடுமையாகவும் நடாத்தச் சிங்களதேசம் முடிவெடுத்துள்ளது- இதற்காகவே புதிய போர்விமானங்களையும், உலங்குவானூர்திகளையும், கடற்படைப் படகுகளையும் கொள்வனவு செய்ய, சிங்கள அரசு முடிவெடுத்திருக்கிறது.

இவ்வாண்டு (1992) போர்க்களத்தில் புலிகள் நிகழ்த்திய பல இராணுவ சாதனைகளால், சிங்களப் படைகள் பேரிழப்புகளையும் பேரழிவுகளையும் சந்தித்தன. இதன் விளைவாகப் படைகளின் மன உறுதியும் உடைந்துபோய் இருக்கிறது.

இவ்விதம், சிங்களப் படையினர் மத்தியில் சீர்குலைந்து போயிருக்கும் போரிடும் உறுதி, உடனடியாகவே சீர்செய்யப்பட வேண்டும் என, படைத்துறைத்தலைமை விரும்புகிறது. ஏனெனில், இந்த நிலை தொடர்ந்தால் அல்லது போரில்லாமல் தற்காலிக அமைதி தோன்றினால், பின்னர் படையினர் மத்தியில் சீர்குலைந்து போயிருக்கும் போரிடும் உறுதியை மீளவும் சீர்செய்வது, மிகமிகக் கடினமானதாகிவிடும் என, அவர்கள் அஞ்சுகின்றனர்.

எனவேதான், போர்மூலம் சிதைந்த போரிடும் உறுதியைப் போர்மூலமே மீளச் சீர்செய்யச் சிங்களத் தளபதிகள் முயலப் போகின்றார்கள்.

சிங்கள தேசத்தைப் பொறுத்தளவில் அவர்கள் இராணுவ வெற்றி எனக் கொண்டாடக் கூடியது, யாழ். குடாநாட்டைப் படையினர் கைப்பற்றுவதுதான்.

குடாநாட்டைக் கைப்பற்றுவதன்மூலம்தான் புலிகளைப் பலமிழக்கச் செய்யலாம். அதன் மூலம்தான் படையினர் இராணுவ மேல் நிலையை அடையலாம் என்பது படைத்துறையின் கணிப்பு.

ஆகவே, வரும் ஆண்டில் யாழ். குடாநாடுமீது சிறியதாகவும், பெரியதாகவும் பல இராணுவ நடவடிக்கைகளைச் சிங்களப் படைகள் நடாத்த முனையலாம்.

இப்படையெடுப்புகளுக்கு வாய்ப்பாக வடதமிழீழம்மீது ஏற்கெனவே அரசு விதித்த பொருளாதாரத் தடை மேலும் இறுக்கப்பட்டுள்ளதை, போருக்கான சமிக்ஞையாகவே கொள்ள வேண்டும்.

அத்துடன் சிங்கள அரசியல்வாதிகள் கூட்டிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முடுதிரை விழுந்ததானது, சிங்கள மக்களும் போரையே விரும்புகிறார்கள் என்பதையே எடுத்துக் காட்டியுள்ளது.

நாங்கள் எப்போதும் சமாதானக் கதவுகளைத் திறந்தே வைத்துள்ளோம்; சமரசப் பேச்சுக்களை நடாத்தத் தயாராகவே உள்ளோம்.

ஆனால், முதலில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் பின் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றே, நாம் வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் சிறீலங்கா அரசோ, சமாதானத்திற்கான சகல வழிமுறைகளையும் நிராகரித்துவிட்டு– யுத்தத்திற்கான தயாரிப்புகளைச் செய்து – எம்மீது போரைத் திணிக்க முனைகின்றது. ✻


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு


www.eelamview.com

www.eelamview.com



TAMIL EELAM

# புலிகளின் குரல்

# மேற்குலக தார்மீகமும் தமிழர் தேசியப் பிரச்சினையும்

உலகின் பல பகுதிகளில் இன்று எரிமலையாகக் கொந்தளித்துக்கொண்டிருக்கும் பல தேசிய நெருக்கடிகளுக்கு, மேற்கத்தைய காலனித்துவ வரலாறு மூலகாரணியாக அமைகிறது. சுதந்திரமாக நிம்மதியாக வாழ்ந்துவந்த நாடுகளை ஆக்கிரமித்து, அரசுகளைக் கவிழ்த்து, எல்லைகளை மாற்றியமைத்து, பொருளாதார வளங்களைச் சுரண்டிச் சூறையாடி, தேசிய இனங்களைச் சிதைத்து, பண்பாடுகளைச் சீரழித்து மேற்குலககாலனித்துவம் நிகழ்த்திவிட்டுச் சென்ற அனர்த்தங்களால், இன்றும் மூன்றாம் உலகம் இரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறது. தமிழீழ நாடும் இந்தக் காலனித்துவப் புயலில் சிக்கிச் சிதையுண்டது; இறைமையை இழந்தது; அரச ஆட்சி உரிமையைப் பறிகொடுத்தது.

தமிழீழத்தின் இன்றைய அரசியல் அவலநிலைக்கு ஆங்கிலேய காலனித்துவம் ஒரு அடிப்படைக் காரணம். ஆங்கிலேயர் இதனை மறுக்கமுடியாது; இரத்தக் கறைபடிந்த இந்த வரலாற்றை மூடிமறைக்கமுடியாது.

தமிழரின் தேசிய பிரச்சினைக்கும் அதனால் எழுந்த தமிழின் அழிப்பிற்கும் மூலகர்த்தா என்ற முறையில் பிரித்தானியாவுக்கு, தமிழர்மீது காருண்ணியம் காட்டவேண்டிய ஒரு மனிதாபிமானக் கடப்பாடு இருக்கிறது. முன்பு இழைத்த பாவங்களுக்குப் புண்ணியம் தேடிக்கொள்ளும் வகையிலாவது, தமிழருக்கு நீதி பெற்றுக் கொடுக்கும் ஒரு தார்மீகக் கடன் இருக்கிறது. அப்படியிருக்க, தமிழர் பிரச்சினையில் பிரித்தானியா எவ்வித நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கிறது?

தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்ற தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் எதையுமே ஏற்றுக்கொள்ள பிரித்தானியா மறுக்கிறது. அதுதான் போகட்டும் என்றால்,தமிழரின் ஆயுத வடிவெடுத்த உரிமைப் போராட்டத்தைப் ''பயங்கரவாதம்'' என்று வர்ணிப்பதுடன், தமிழரின் உரிமைக்காக இரத்தம் சிந்திப் போராடும் விடுதலைப் புலிகளை ''பயங்கரவாதிகள்'' என்றும் ஆங்கில அரசு முத்திரைகுத்த முயல்கிறது. அத்துடன் நின்றுவிடாது, இனவெறி பிடித்த சிங்கள அரசுக்குத் தனது ஆயுதச் சந்தையையும் அகலத் திறந்து விட்டிருக்கிறது. மனித உயிர் அழிப்பிலும், மனித உரிமை மீறலிலும் உலக சாதனையை நிலைநாட்டி நிற்கும் பிரேமதாசா அரசுக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்தால் அவை யார்மீது பிரயோகிக்கப்படும் என்பது, உலக அனுபவம் நிறைந்த காலனித்துவக் கிழட்டு நரிக்குத் தெரியாத விடயமாக இருக்கமுடியாது. இப்படியாக, பிரித்தானியா தமிழர் மீது தனது தார்மீகக் கடப்பாட்டைக் கடைப்பிடித்து காருண்ணியத்தைச் சொரிந்து வருகிறது!மேற்குலகத்தின் தார்மீகம் மனுநீதியை அடிப்படையாகக் கொண்டதல்ல. அப்பட்டமான சுயநல, பொருளாதார, வர்த்தக நலன்களையே முதன்மையாகக் கொண்டது என்பதற்கும் பிரித்தானியாவின் இந்த வெளியுறவுக் கொள்கை, ஒரு சிறந்த உதாரணம். மூன்றாம் உலக நாடுகளின் சர்வாதிகார அரசுகளுக்கும் சனநாயக விரோத சக்திகளுக்கும் முண்டுகொடுத்து நிற்கும் மேற்குலகம், இந்நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஒப்பாரி வைப்பது, மிகவும் கேலிக்கூத்தான அரசியல் பாசாங்கு என்றே சொல்லவேண்டும்.

மனுதர்மம் போதிப்பதற்கு ஒரு தார்மீக அடிப்படை அவசியம். மேற்குலக வல்லரசுகளிடம் அன்றும் சரி, இன்றும் சரி, இந்தத் தார்மீக அடிப்படை இருக்கவில்லை. நீண்ட கொடிய காலனித்துவ வரலாறும் தொடர்ந்து நிகழ்த்திவரும் நவகாலனிய சுரண்டல்களும், தலையீடுகளும், ஆக்கிரமிப்புகளுமாக மேற்குலகம் மிகவும் அநாகரிகமான, அதர்மமான சுயநலப்போக்கையே கடைப்பிடித்து வருகிறது. அப்பாவிகளான ஜப்பானிய வெகுசனம்மீது அணுகுண்டுகள் வீசிய அமெரிக்கா, ஜேர்மனிய நகரங்களைச் சுடுகாடாக்கிய பிரித்தானியா, அறுபது லட்சம் யூதர்களை அழித்தொழித்த ஜேர்மனி, அல்ஜீரியாவில் இனக்கொலை புரிந்த பிரான்ஸ் - இப்படியாக சமீபத்திய பாலைவனப் புயல்வரை, யுத்த நிர்ப்பந்தம் என்ற நியாயப்பாட்டில் மேற்குலகம் மனித குலப் படுகொலைகளைப் புரிந்திருக்கிறது. இப்படியாக இரத்தக்கறை படிந்த வரலாற்றைக்கொண்ட மேற்குலக நாடுகள் போர்த் தர்மம் பற்றியும் மனித உரிமைகள் பற்றியும் மூன்றாம் உலகிற்குப் போதனை செய்து வருவது விந்தையாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் எமது விடுதலைப் போராட்டத்தை ''பயங்கரவாதம்'' என வர்ணிப்பதற்கு, இந்த நாடுகளுக்கு எந்த வித தார்மீகத் தகுதியும் இல்லை.

தனிமனித சுதந்திரம் முக்கியமானது; தனிமனித உரிமை அத்தியாவசியமானது; இவை மீறப்படுவது கண்டனத்திற்குரியது. ஆனால் தனிமனிதர்களின் கூட்டுமொத்தத் திரளாக வியாபித்துநிற்கும் ஒரு இனத்தின் அல்லது தேசத்தின் உரிமையும் சுதந்திரமும், எல்லாவற்றையும்விட முக்கியமானது. ஒரு தேசத்தின் அல்லது இனத்தின் உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்படுவதை அலட்சியம்செய்துவிட்டு, தனிமனித உரிமைமீறல்களுக்கு மேற்குலகம் முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனித உரிமை என்ற தார்மீகத் தத்துவார்த்த வரையறைகளுக்கு அப்பால் விஸ்வரூபப் பரிமாணம் பெற்று நிற்கும் இன உரிமைப் பிரச்சினைகளைப் பார்க்க மறுக்கிறது. இதனால், தனிமனிதச் சாவுகளுக்குக் கண்ணீர் வடிக்கும் மேற்குலகம் இனவாரியாகச் சமூகம் அழிவதைக்கண்டும் வாய்மூடி மௌனம் சாதிக்கிறது.

தமிழீழத்தில் ஒரு இனப்படுகொலை நடக்கிறது; இந்த அநீதிக்கு எதிராக நாம் போராடுகிறோம். இனப் படுகொலைக்கு எதிரான எமது உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக் கண்டித்துவிட்டு, தனிமனித உரிமைகள்பற்றி மேற்குலகம் போதிக்கிறது. இது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்ற மிகவும் கேலிக்கூத்தான விவகாரமாகும். ❋

www.eelamview.com

www.eelamview.com



# வெற்றிகளால் நிறைந்த 1992

1992 நிறைவடையப் போகின்றது.

சிங்கள அரசைப் பொறுத்தளவில் இவ்வாண்டு சோகத்துடனும் கலக்கத்துடனும் முடிவடைகின்றது; ஆனால், தமிழீழ மக்களைப் பொறுத்தமட்டில் இது வெற்றியாண்டாகத் திகழ்கிறது.

போர் அரங்கிலும் சரி, அரசியல் அரங்கிலும் சரி இப்போராண்டு புலிகளுக்குச் சாதனையாண்டாகவே தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இப்போராண்டில் எண்ணற்ற பல சாதனைகளைப் புலிகள் படைத்துள்ளனர்.

போர்க்கள நிலவரங்களுக்கு ஏற்ப தலைவர் பிரபாகரன் ,அவர்கள் வரைந்த புதிய புதிய போருபாயங்களும் தந்திரங்களும், புலிவீரர்கள் புரிந்த அதி உன்னத தியாகங்களும் போர்த்திறமைகளும், இச் சாதனைகளுக்குக் காரணமாக உள்ளன.

இவ்வாண்டில் இடம்பெற்ற வெற்றிச் செய்திகளின் தொகுப்பைத் தாங்கியனவாக, அடுத்துவரும் சில பக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1992, எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் வெற்றிகள் நிறைந்த ஆண்டாகத் திகழ்கின்றது


'இரண்டாவது ஈழப்போர்' என உலகம் அழைக்கும் இந்தப்போரில், இவ்வாண்டில் புலிப்படை பல சாதனைகளைப் படைத்துள்ளது.

இச்சாதனைகளால் எமது விடுதலைப் போராட்டம் ஒரு படி வளர்ச்சியைக் கண்டுள்ளது.

எமது மக்களைப் பொறுத்தளவில் பல நெருக்கடிகள், பல்வேறு அழுத்தங்கள், துன்பதுயரங்களை அதிகளவில் எதிர்கொண்ட இந்த ஆண்டிலேயே இச்சாதனைகளும் படைக்கப்பட்டது ஒரு சிறப்பு அம்சமாக – நம்பிக்கைதரும் விடயமாக – உள்ளது.

போர்க்கள நிலவரங்களுக் கேற்ப தலைவர் பிரபாகரன் அவர்கள் வரைந்த புதிய புதிய போருபாயங்களும் தந்திரங்களும், புலிவீரர்கள் புரிந்த அதி உன்னத தியாகங்களும் அவர்கள் காட்டிய போர்த்திறமைகளும் இச்சாதனைகளுக்குக் காரணமாகவுள்ளன.

நாம் நினைத்தபடி எமது இலக்கை நோக்கி போர்ச்சக்கரத்தை நகர்த்தக்கூடிய பல வெற்றிகளை, இப்போராண்டில் பெற்றுள்ளோம்.



வெற்றிகரமான கட்டுப்பொத்த படைமுகாம் தகர்ப்பில், திறம்படச் செயற்பட்ட போராளிகளைத் தலைவர் அவர்கள் கௌரவித்துப் பரிசளித்தபோது.

சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பிரதிநிதிகளான சிங்கள ஆளும்வர்க்கமும், அதன் அடிவருடிகளும் திகைத்துத் திணறும் அளவுக்கு, இவ்வெற்றிகள் அமைந்திருந்தன.

இவ்வாண்டின் இறுதிக்குள் புலிகளை ஒடுக்கி போராட்டத்தை நசுக்கி விடுவோம் என்று கர்ச்சனை செய்த சிங்கள உயர் தளபதிகள் பலர், இன்று உயிரோடில்லை.

புலிகளுடனான போரைக் களத்தில் வழி நடாத்திவந்த மூத்த – அனுபவம் நிறைந்த – படைத்துறைத் தலைமையே இன்று அழிக்கப்பட்டுவிட்டது.

1992 இன் முடிவில் யாழ். குடாநாடு தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிடுமென, சிறீலங்காப் படைத்துறைத் தலைமை சூளுரைத்திருந்தது.

வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் கொழும்புப் பத்திரிகையாளர்களையும் சிங்களப் படையின் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் விமலரட்ணா சந்திக்கும்போதெல்லாம், மிக விரைவில் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றிப் புலிகளை அழித்தொழிக்கப்போவதாக மார்தட்டுவார்.

ஒருமுறை, இவரைச் சந்தித்துவிட்டு யாழ்ப்பாணம் வரவிருந்த ஒரு பிரான்சு நாட்டுச் செய்தியாளர் தான் யாழ்ப்பாணம் செல்லப்போவதாகவும், அங்கே பிரபாகரனைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தால் அவரிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா என, மேஜர் ஜெனரல் விமலரட்ணாவைக் கேட்டதற்கு...

'வெகு விரைவில் படையினர் தரப்பிலிருந்து பிசாசொன்று பிரபாகரனைச் சந்திக்கக் காத்திருப்பதாக தலைவர் பிரபாகரனிடம் சொல்லும்படி' கூறியதாக, அச்செய்தியாளர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், யாழ்ப்பாணம்மீது படையெடுக்கத் துடிதுடித்த மேஜர் ஜெனரல் விமலரட்ண இன்று உயிரோடில்லை. அவர் விரும்பியபடியே, அராலிவெளியில் பிசாசாக உலாவிக்கொண்டு தனது படையினரைப் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றார்!

மேஜர் ஜெனரல் விமலரட்ணாவுடன் அவரது மேலதிகாரியான லெப். ஜெனரல் கொப்பேகடுவவும் இன்றில்லை.

குடாநாட்டின்மீதான படையெடுப்பிற்கு உதவியாக கடல் முற்றுகையில் ஈடுபட்டிருந்த றியர் அட்மிரல் ஜெயமகாவும் இன்றில்லை; அவரதுமேலதிகாரியான அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவும் உயிரோடில்லை.

மொத்தத்தில் சிறீலங்காப் படைத்துறையின் முக்கிய அதி உயர் தளபதிகள் பலர், இந்த வெற்றி வருடத்தில் கொல்லப்பட்டுள்ளனர். இது மிக முக்கியமானதொரு வெற்றிச் சாதனையாகும்.

இப்போராண்டின் ஆரம்பத்திலிருந்தே சிங்களப் படைத்துறைத் தலைமை யாழ். குடாநாட்டைக் கைப்பற்றவும், தென்தமிழீழத்தைத் தனது பூரணகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது.

தென்தமிழீழத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, பல இராணுவ நடவடிக்கைகளை அடுத்தடுத்து அங்கே மேற்கொண்டது. ஆனால் சிங்களப் படைகள் எதிர்பார்த்த பலனை அவை கொடுக்கவில்லை. மாறாகப் புலிகளைத் தேடி அழிக்கவென போர்க்கோலம்பூண்டு புறப்பட்ட சிங்களப் படையணிகள் பல, புலிகளால் இடைநடுவில் மடக்கி அழிக்கப்பட்ட சம்பவங்களே அதிகம் நடந்தன.

கடந்த போராண்டில் தென்தமிழீழத்தில், பாரிய உயிரிழப்புக்களைப் படையினர் சந்தித்துள்ளனர் என்ற உண்மை, சிங்கள இராணுவ அதிகாரிகளாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம்.

அதேசமயம், யாழ்ப்பாணம் மீது படை எடுத்துச் செல்வதற்கு சிங்களப்படை பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், ஒவ்வொரு தடவையும் படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகளில் சிங்களப் படைகள் ஈடுபடும்பொழுது, நாங்கள் முந்திக் கொண்டு அதன்மீது பெருந்தாக்குதலை – பேரழிவுகளை ஏற்படுத்தி, படையெடுப்புத் திட்டங்களைச் சீர்குலைத்து வந்துள்ளோம்.

அதேவேளை இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு இவ்வாண்டு, போர்க்களத்தில் சிங்களப் படை பெரும் இரத்தக்களரியைச் சந்தித்துள்ளது.

இந்த ஒரு வருடத்தில் (1992) மட்டும் 1400இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினர் அங்கவீனர்களாகிவிட்டனர்.

சிங்களப் படை 1284 ஆயுதங்களை புலிகளிடம் பறிகொடுத்துவிட்டது,

இவை ஒருபுறமிருக்க, இதுவரை நாளும் சிறீலங்காவின் தரைப்படையுடன் மட்டுப்படுத்தப்பட்டு சாதாரண சிப்பாய்கள் மட்டத்திலிருந்த யுத்தம், இப்போராண்டில் கடற்படை விமானப்படையென்று சிறீலங்காவின் முப்படைக்கும் பரவலாக்கப்பட்டு, படைத்துறையின் உயர்பீடம்வரை விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

[ 7 ஆம் பக்கம் பார்க்க ]

www.eelamview.com

www.eelamview.com



# வெற்றியின் பாதையில்

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் திருப்புமுனைகளை ஏற்படுத்திய பல வெற்றிச் சம்பவங்கள் இப்போராண்டில் நடந்துள்ளன. தமிழீழத்தின் எல்லாப் போர்முனைகளிலும் இவ்வெற்றிகள் நிகழ்ந்துள்ளன. கடலிலும் தரையிலும் வானிலும் வெற்றிக் கனிகளை நாம் பறித்துள்ளோம். இப்போராண்டில் நாம் பெற்ற சில இராணுவ வெற்றிகள் சிங்கள தேசத்தை உலுக்கியெடுத்திருந்தன; உலகை ஆச்சரியப்படவைத்தன. இப்போராண்டில் அநேகமாக, ஒவ்வொரு நாளுமே எமது மக்கள் வெற்றிச் செய்திக்காக ஆவலுடன் காத்திருந்தார்கள். அந்தளவுக்கு வெற்றிச் செய்திகளால் இவ்வாண்டு நிறைந்து கிடக்கின்றது. நாம் பெற்ற இந்த இராணுவ வெற்றிகள் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு படி முன்னோக்கி நகர்த்தியுள்ளது. அடுத்தடுத்து நாம் பெற்ற இந்த வெற்றிகள், எமது மக்களின் மனதில் ஒரு நம்பிக்கையை ஊட்டியுள்ளது. இப்போராண்டில் நாம் பெற்ற முக்கியமான வெற்றிகளுள் சிலவற்றைத் தொகுத்து, இங்கே ஒரேபார்வையில் தருகின்றோம். இந்த ஆண்டில் எதிரியிடமிருந்து நாம் கைப்பற்றிய ஆயுதங்கள், இராணுவ தளபாடங்கள், கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை போன்ற முழுவிபரங்களும் 9 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.**

## கடலில் சாதனை

05-02-1992 அன்று, ஆனையிறவு கடல் நீரேரியில் வைத்து சிங்களக் கடற்படையின் 41 அடி நீளமான விசைப்படகு ஒன்று, கடற்கண்ணிவெடி மூலம் தகர்த்து மூழ்கடிக்கப்பட்டது. எமது கடற்புலி வீரர்கள் இச் சாதனையைப் படைத்தனர். 30-08-1992 அன்று, இதே ரகத்தைச் சேர்ந்த இன்னொரு படகை, மண்டைதீவில் தரை - கடற் படைகளின் கூட்டுத் தளத்தினுள் வெற்றிகரமாக ஊடுருவிய கடற்புலி வீரர்கள் அங்கிருந்து எது வித சேதமுமின்றிக் கைப்பற்றி வந்தனர்.

இப்படகுகள் பிரித்தானியத் தயாரிப்பான 'கூகா' ரகத்தைச் சேர்ந்தவையாகும். இப் படகுகள், அமெரிக்கத் தயாரிப்பான 250 குதிரை வலுவுடைய இரு நீருந்து [Water Jet] இயந்திரங்கள் பொருத்தப்பட்டவையாகும். தொலைத் தொடர்பு சாதனங்கள், நவீன திசையறி கருவிகள் பொருத்தப்பட்டு, ஆழம் குறைந்த நீரேரிகளில் பாவிப்பதற்கெனச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட இப் படகுகள், ஒரு அடி ஆழமுள்ள நீரிலும் கிழித்துக் கொண்டு செல்லக்கூடியவை.

இப் படகுகளை இழந்ததானது சிங்களப் படைத்துறைத் தலைமையைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஏனெனில், கடற்படையினர் பாவிக்கும் 'டோரா', 'டிங்கி' படகுகளைவிடவும் இவை சிறப்பானவையாகும். இப் படகுகள், கடற்படையினர் பாவிக்கும் பீரங்கிப் படகுகளினால்கூட நெருங்கமுடியாத அளவு, அதி வேகமுடையவையாகும்.

இப் படகைக் கைப்பற்றியதுடன் கடற்புலிகளின் பலம் அதிகரித்துள்ளதாகச் சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

## முல்லை அதிரடி

10-02-1992 அன்று முல்லைத்தீவில் எமது வீரர்கள் நிகழ்த்திய, துணிகரமான - மின்னல் வேக - அதிரடியில் 25 படையினர் கொல்லப்பட்டதுடன், 15 பேர் படுகாயமடைந்தனர். இவ்வதிரடி நிகழ்ந்தவிதம் இராணுவத்தினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

முல்லைத்தீவு படைத்தளத்தின் கரையோரப் பாதுகாப்பு வியூகம்மீது மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலானது, இவ்வாண்டின் ஆரம்பத்தில் எமது வீரர்களினால் நிகழ்த்தப்பட்ட 'மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை' என வர்ணிக்கப்பட்டது. இதன் போது கைப்பற்றப்பட்ட 22 ஆயுதங்களில் ஒன்று கனரக '50 கலிபர்' துப்பாக்கி என்பது, ஒரு சிறப்பான விடயமாகும்.

இத்தாக்குதல் தொடர்பாக பி.பி.சி. வானொலியின் அப்போதைய கொழும்பு முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில், 'புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிங்களப் படை அகலக் கால்வைத்தால், அது மிக ஆபத்தாக முடியும் என்பதையே இத் தாக்குதல் உணர்த்துகிறது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

## மணலாற்றுச் சாதனை

17-03-1992 அன்று மணலாற்றில் நிகழ்ந்த அதிரடித் தாக்குதலொன்றின்போது, 106 மி.மீ. 40-எம் பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றைச் சிங்களப் படையினரிடமிருந்து எமது வீரர்கள் கைப்பற்றினர்.

மணலாறு - கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிலிருந்து கவசவண்டிகள் சகிதம் பெரும் எண்ணிக்கையில் வெளியேறிய படையினர், 'கயேபகர' என்றபெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்த போதே இவ்வதிரடி நடந்தது என்பது, குறிப்பிடத்தக்கதாகும்.

26 படையினர் கொல்லப்பட்ட இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட 15 ஆயுதங்களில் - 106 மி.மீ. பின்னுதைப்பற்ற பீரங்கியுடன், கனரக ,50 கலிபர்' துப்பாக்கி ஒன்றும் அடங்கும்.

இவ் 106 மி.மீ. 40 -எம் பின்னுதைப்பற்ற பீரங்கி, உலகில் 32இற்கும் மேற்பட்ட நாடுகளில் பிரதான தாங்கி எதிர்ப்பு ஆயுதமாக உபயோகிக்கப்படுகின்றது. அமெரிக்கத் தயாரிப்பான இவ் ஆயுதம் இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான், ஜப்பான், பிரேசில், ஸ்பெயின் முதலிய நாடுகளிலும் பாவனையில் உள்ளது. இதன் குண்டுகள் 7 கி.மீ. தூரத்திற்குப் பாயக்கூடியவை.

- ☆ **தாங்கி எதிர்ப்பு வெடிமருந்துடைய குண்டு,**
- ☆ **பிளாஸ்டிக் வெடிமருந்தையும், பாஸ்தச்சுட்டியையும் கொண்ட குண்டு,**
- ☆ **துருப்பு எதிர்ப்புக் குண்டு,**

ஆகிய மூன்று வகையான வெடிகுண்டுகளை இப் பீரங்கியில் உபயோகிக்கலாம்.

இவ்வளவு சிறப்பானதும் மிகப்பயனுடையதுமான இவ் உயர்ரக ஆயுதத்தைப் புலிகளிடம் இழந்தது, சிங்களப் படையினர் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியது. சிங்களப் படையிடமிருந்து, முதற்தடவையாக ஒரு தாங்கி எதிர்ப்புப் பீரங்கி கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## சகடை விழுந்தது

05-05-1992 அன்று இயக்கச்சியில், வான்படையினரின் வை-8 (அன்ரனோ —8) ரகக்குண்டுவீச்சு விமானமொன்று, எமது வீரர்களினால் சுட்டுவீழ்த்தப்பட்டது. 'பலவேகய-II' என்ற பெயரில் கட்டைக்காட்டிலிருந்து, ஆனையிறவு நோக்கிய இராணுவ நடவடிக்கையைச்செய்த சிங்களப்படைகளுடன் எமது வீரர்கள் சமர்புரிந்துகொண்டிருந்த போது, குண்டுவீச்சில் ஈடுபட்டிருந்த இவ்விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது. வான்படையின் அனுபவமும் சிறப்புப் பயிற்சிகளும் பெற்ற உயர் அதிகாரியான ஸ்குவார்டன் லீடர் காசிர், மேலும் 5 அதிகாரிகள் ஆகியோருடன், மொத்தம் 19 வான்படையினர் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர் என்பது, ஒரு முக்கிய விடயமாகும்.

படையினருக்கான விநியோகங்களைச் செய்வதில் மிகமுக்கிய பங்கை ஆற்றி வந்ததுடன் தமிழ் மக்களின் குடியிருப்புக்களின் மீதும், சண்டைகளிலும் குண்டு வீசுவதில் ஈடுபடுத்தப்பட்ட இவ்விமானத்தையும், அனுபவம் மிக்க - திறமைசாலிகளான பல விமான ஓட்டிகளையும் ஒரே விநாடியில் இழந்துபோனமை, சிங்களப் படைத்துறைத் தலைமையை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

## முகாம் தகர்ப்பு; குடியேற்றங்கள் கேள்விக் குறி

11-07-1992 அன்று வன்னி எல்லையில், கட்டுப்பொத்த இராணுவ முகாம்மீது எமது வீரர்கள் 30 நிமிட உக்கிரத்தாக்குதலை நிகழ்த்தினர். இத் தாக்குதலின்போது 53 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 107 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் அம்முகாமிலிருந்த 2 கவச வண்டிகள், ஒரு புல்டோசர் என்பவற்றுடன் முகாமும் நிர்மூலமாக்கப்பட்டது.

தந்திரி மலையிலிருந்து படையினருக்கு உதவிக்காக வந்த இராணுவ அணிமீது தாக்கியதில் ஒரு கவச வண்டி நொருக்கப்பட்டதுடன், மற்றொன்று சேதமாக்கப்பட்டது. இவ்வாண்டில் நடந்த மிகப்பெரிய தாக்குதல் இதுவென அப்போது கூறப்பட்டது.

ஆக்கிரமிக்கப்பட்ட தமிழீழப் பகுதிக்குள் சிங்களவர்களைக் குடியேற்றி, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகவே இம் முகாம் அமைக்கப்பட்டிருந்தது என்பது, ஒரு முக்கிய அம்சமாகும்.

'படையினர்மீது மிகக் கடும் தாக்குதலைத் தம்மால் நடாத்த முடியும் என்பதைப் புலிகள், கட்டுப்பொத்தவில் மீண்டுமொருமுறை காட்டியுள்ளனர்' என்றது பி.பி.சி.

கொக்காவில், மாங்குளம், மூதூரில் கொமாண்டோக்கள் மீதான தாக்குதல் என்பவற்றைவிட இது மிக மோசமானது என, 'சண்டே ஐலண்ட்' கூறியது.

கட்டுப்பொத்த முகாம் அழிக்கப்பட்டதை அடுத்து செட்டிகுளப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப்பட்டிருந்த தொடர் காவலரண்களிலிருந்து பின்வாங்கிய படையினர், பிரதான முகாமிற்குள் சென்றனர். மேலும், எல்லையோர மினி முகாம்களின் பாதுகாப்புக் குறித்துச் சர்ச்சை எழுந்ததால், அவற்றை மூடிவிடவும் படைத்துறைத் தலைமை ஆலோசித்தது. எனினும், துருப்புக்கள் பலப்படுத்தப்பட்டு நிலைகொள்ள வைக்கப்பட்டன. முகாம்கள் நூறு வீதம் உசார்படுத்தப்பட்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில்தான் மீண்டும் அதே நிலைகள் மீது 02-12-1992 அன்று ஒரு கடும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இம்முறை கட்டுப்பொத்த முகாமுடன் அருகிலிருந்த ஹந்தபாங்கொட, வீரவெல முகாம்களும் சமகாலத்தில் தாக்கப்பட்டன. இப் பெரும் தாக்குதலில் 20 படையினர் கொல்லப்பட்டதுடன், 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்; 34 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன், 3 முகாம்களும் நிர்மூலமாக்கப்பட்டன.

'சிங்களக் குடியேற்றவாசிகளின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்ட இராணுவ முகாமையே படையினரால் பாதுகாக்க முடியவில்லை' எனச் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து, அம் முகாமை மூடிவிடுவது குறித்து படைத்துறை உயர் வட்டாரங்களில் பரிசீலிக்கப்பட்டது.

கட்டுப்பொத்த இராணுவ முகாம்மீது அடுத்தடுத்து நடாத்தப்பட்ட இப் பெரும் தாக்குதல்கள், தமிழீழப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களைக் கேள்விக் குறியாக்கியது.

## தென் தமிழீழத்தில் ஒரு வாரத்தில் 54 படையினர் பலி

29-07-1992 அன்று-ஒரே நாளில்- தென்தமிழீழத்தில் எமது வீரர்கள் நடாத்திய இருவேறு தாக்குதல்களில். 34 படையினர் கொல்லப்பட்டனர்.

அதிகாலை 12.20 மணிக்குத் திருக்கோணமலை - சாம்பல்தீவில் பொலிஸ் - இராணுவ கூட்டு முகாம் தாக்கி அழிக்கப்பட்டது. இத் தாக்குதலின் போது 5 படையினர் கொல்லப்பட, ஏனையோர் ஆயுதங்களையும் போட்டுவிட்டுத் தப்பி ஓடினர். 15 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. முகாம் தாக்கப்பட்ட சமகாலத்தில், முகாமின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த, அருகிலிருந்த இரு காவலரண்களும் தாக்கப்பட்டன.

இத் தாக்குதல் நிகழ்ந்த பின் - காலை 8.30 மணியளவில், மட்டக்களப்பு - நாவலடியில் படையினரின் ரோந்து அணி ஒன்று எமது வீரர்களினால் சிதறடிக்கப்பட்டது. இத்துணிகரத் தாக்குதலின்போது. முப்பதிற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர்; ஏனையோர் சிதறி ஓடினர்; 34 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த அதிரடிக்குள் அகப்பட்ட ரோந்து அணிக்கு, உதவவென், நாவலடி முகாமிலிருந்து கவச வண்டிகளுடன் வந்த படையினரை எமது இன்னொரு படையணி தாக்கிய போது, 'தாங்கி' ஒன்று பலத்த சேதமடைய - அவர்களும் திரும்பி ஓடினர்.

அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் எடுத்துச் செல்ல, மாலை 5.30 மணியளவில் வந்த துருப்புக்களின் ட்ரக் வண்டிமீது கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தியதில், அது நொருங்கிச் சிதறியது.

www.eelamview.com

www.eelamview.com



# ▷▷▷▷▷▷▷ வெற்றிகளால் நிறைந்த 1992

இவ்விரு தாக்குதல்களும் நடந்த 5 ஆவது நாள். மட்டக்களப்பு கரடியனாற்றில் படையினரின் ரோந்து அணி ஒன்று எமது வீரர்களினால் தாக்கிச் சிதறடிக்கப்பட்டதில், 15 படையினர் கொல்லப்பட்டனர்; 16 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்விதம் ஒரு வாரத்தில் தென்தமிழீழத்தில் மட்டும் 54 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். இது கொழும்பை விரக்திக்குள்ளாக்கியது. கிழக்கில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு, தமது நிலைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அரச அதிகாரிகள் அறிவித்துக்கொண்டிருந்த சமயத்தில் இத்தாக்குதல்கள் நிகழ்ந்திருப்பது, படைத்துறை உயர் வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் கூறின.

''கிழக்கில் நிலைமை மிக மோசமானதாக-பிரச்சினையாக இருக்கின்றது. தாக்குதலுக்குச் செல்லும் படையினரே தாக்கப்படுகின்றனர்'' என ஆதங்கப்பட்டார் ஒரு உயர் படை அதிகாரி.

''கிழக்கில் புலிகள் பரவலாக உள்ளார்கள். படையினர் நடவடிக்கைக்குச் செல்லும்போது அவர்கள் கெரில்லாத்தந்திரோபாயங்களுடன் தாக்குகின்றனர். அங்கு பாரிய அளவில் இராணுவ நடவடிக்கைகளைச் செய்வது சாத்தியமற்றது'' எனப் படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க கூறினார்.

## வடபிராந்திய படைத் தலைமை அழிப்பு

08 - 08 - 1992 அன்று அராலித்துறையில் எமது கண்ணிவெடியில் சிக்கி, சிங்களப் படைத்துறையின் வட பிராந்தியத் தளபதிகள் கொப்பேகடுவ, விஜய விமலரட்ண, ஜெயமகா உட்பட 9 அதிகாரிகளும் ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டனர். இராணுவத்தினரின் பாதுகாப்பு எல்லைக்குள் வெற்றிகரமாக நுழைந்த எமது சிறப்பு வேவுப் பிரிவினர் இவ்வரலாற்றுச் சாதனையைப் படைத்தனர்.

சிங்களப் போர்வானின் நம்பிக்கை நட்சத்திரங்களான இவ் அதி உயர் தளபதிகளின் சாவானது, சிறிலங்கா தேசத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது. தமிழீழத்திற்கெதிரான போரில் சிங்களப் படைகளை வழி நடாத்திய இந்த முன்னணித் தளபதிகள் ஒரே நாளில் - ஒரே குண்டில் அழிக்கப்பட்ட இத் தாக்குதலானது, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், மிக முக்கியமான நிகழ்வுகளுள் ஒன்றாக அமைந்துவிட்டது. இக் கண்ணியில் சிக்கி, வடபிராந்தியப் படைத்துறைத் தலைமையே அழிந்துவிட்டது.

எமது மக்களின் மனங்களில் நம்பிக்கை ஒளியைப் பிரகாசிக்கச் செய்த இக் கண்ணிவெடியுடன், சிங்களத்தேசப் படைகளின் போரிடும் உறுதியும் குலையத் துவங்கியது.

## பூநகரித் தாக்குதல்

25- 09- 1992 அன்று, பூநகரி படைத்தளத்தின் ஒரு பகுதிமீது எமது வீரர்கள் நடாத்திய பெரும் அதிரடித் தாக்குதலொன்றில் 25இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன், 27 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

பூநகரி இராணுவத் தளத்தின் தென்பகுதி (பள்ளிக்குடா) அரண்களே தாக்கப்பட்டவையாகும். ஒன்றரை மைல் தூரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த 62 காவல் அரண்களைத் தாக்கி அழித்த எமது வீரர்கள், தளத்திற்கு உள்ளே நுழைந்து இரு மினி முகாம்களையும் தாக்கினர். தாக்குதலின் கடுமையினால், இறந்த சகாக்களின் உடல்களையும் எடுக்காமல் படையினர் தளத்தின் மையப் பகுதி நோக்கி ஓடிவிட்டனர்.

பெரும் எண்ணிக்கையிலான தொடர் காவலரண்களையும், இரு மினிமுகாம்களையும் கொண்ட மிக நீண்ட படைத்தளப் பிரதேசத்தின் மீது நடாத்தப்பட்ட முதலாவது மிகப்பெரிய தாக்குதலாக, இது அமைந்துள்ளது.

புலிகள் நடாத்திய மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை(Operation)என,'ஐலன்ட்' ஏடு இதனை வர்ணித்தது. வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் இத்தாக்குதல் செய்தியை மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

## பலாலிச் சமர்: போரில் புதிய பரிமாணம்

23-11-1992 அன்று, பலாலி படைத்தளத்தின் கிழக்கு எல்லையில்- நாலரைக் கி.மீ. நீள இராணுவத் தொடர் காவலரண்மீது எமது வீரர்கள் தொடுத்த உக்கிரத் தாக்குதல், படைத்துறை வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இவ் வெற்றிகரமான தாக்குதல், எமது விடுதலைப் போர் ஒரு புதிய பரிமாணத்திற்குள் சென்றுவிட்டதைக் காட்டியுள்ளது.

தமிழீழத்தில் உள்ள சிங்களப் படைகளின் மிகப்பெரிய தளமான பலாலியில் - அதிநவீனரக ஆயுதங்கள், ஆட்லறி கனரகப் பீரங்கிகள், கோடிக்கணக்கான வெடிப்பொருட்கள், குண்டு வீச்சு விமானங்கள், தாங்கிகள், கவசவண்டிகள் சகிதம் எப்பேர்ப்பட்ட ஒரு தாக்குதலையும் முறியடிக்கவென உசார்நிலையில் வைக்கப்பட்டிருக்கும், ஆயிரக்கணக்கான முப்படைத் துருப்புக்களையும் கொண்ட ஒரு தளத்தில் - துணிகரமாகவும் வெற்றிகரமாகவும் இத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

விமான இறங்கு தளத்தின் பாதுகாப்பிற்கென, இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் தளம் விஸ்தரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பாதுகாப்பு வியூகமே இத்தாக்குதலின்போது உடைக்கப்பட்டதாகும் என்பது, ஒரு முக்கிய விடயமாகும். நாலரைக் கி. மீ. நீளத்திற்கு, உட்பக்கமாக ஒரு மைல் தூரம்வரை இராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டு, தளத்தின், மையப்பகுதியை நோக்கிப் படையினர் விரட்டப்பட்டனர்.

தாக்கப்பட்ட தளப்பிரதேச அரண்களின் 1ஆவது, 2ஆவது பொறுப்பாளர்களான கப்டன் அபயரட்ண, லெப். பெரேரா ஆகிய அதிகாரிகள் உட்பட 50இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட இத்தாக்குதலின்போது, 'எம். கே.' கனரகத் துப்பாக்கி உட்பட 71 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன், ஒரு சலாடின் கவச வண்டியும், 3 ட்ரக் வண்டிகளும் அழிக்கப்பட்டன.

சிங்களப் படைத்துறையின் உயர்அதிகாரி ஒருவர் சொன்னார்: ''இது குறுகிய நேரத்தில் நடந்த மிகக் கொடிய யுத்தம். கனரக ஆயுதங்களையும் போர்த் தாங்கிகளையும், யுத்த உலங்குவானூர்திகளையும் பயன்படுத்தியபோதும், படையினர் பலத்த இழப்பைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது''.

யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது படையெடுக்கத் தயாராக இருந்த சிங்களப் படையினரின் திட்டத்தை, இப்பெருந்தாக்குதல் சீர்குலைத்துள்ளது.

## இராணுவ வேலி தகர்ப்பு : ஆயுதக் கிடங்கு எமது கையில்

01-10-1992 அன்று நள்ளிரவில், கட்டைக்காடு சிங்களப் படைமுகாமைத் தாக்கிய புலிவீரர்கள், அங்கிருந்த ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றி, 5 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய ஆயுதங்கள், வெடிப்பொருட்கள், மற்றும் படைத் தளபாடங்களை மீட்டெடுத்து ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தனர்.

நள்ளிரவு 11.55 மணியளவில் எமது இயக்கத்தின் இம்ரான் -பாண்டியன் சிறப்புப் படையணி, மகளிர் படையணி, கடற்புலிகள் ஆகிய பிரிவுகள் தாக்குதலை ஆரம்பித்தன. 2½ மைல் நீள இராணுவ வேலியை உடைத்துக்கொண்டு உள் நுழைந்த மெது வீரர்கள், ஒருமணிநேர உக்கிரத் தாக்குதலின் பின் மினிமுகாமை வீழ்த்தி, அங்கிருந்த ஆயுதக்கிடங்கைக்கைப்பற்றினர். அதிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும், படையினரின் இரு வாகனங்களையும் கைப்பற்றிய பின் மினி முகாம் அழிக்கப்பட்டது.

30இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட இத் தாக்குதலின்போது, இராணுவக் காவல் அரண்களிலிருந்தும் ஆயுதக் கிடங்கிலிருந்துமாக மொத்தம் 207 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றில் ஒன்று, '50 கலிபர்' கனரக இயந்திரத் துப்பாக்கியாகும். சிங்களப் படையினருடனான போரில் இவ்வளவு பெருந்தொகையான ஆயுதங்கள் ஒரேதடவையில் இதுவரை கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலுக்காக புலிகள் வரைந்த திட்டமும் அது செயற்படுத்தப்பட்ட விதமும்,சிங்களத் தளபதிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. படையினர் எவ்வளவோ தீவிரமாகச் சண்டையிட்டும், புலிகள் ஆயுதங்களை எடுத்துச் செல்வதைத் தடுக்க முடியவில்லை என, பாதுகாப்பு வட்டாரங்கள் அங்கலாய்த்தன.

''ஒருசில மணிநேரத்துக்குள், பலகோடிரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் எடுத்துச் சென்று விட்டனர்'' என்று, 'சண்டே ரைம்ஸ்' அதிசயித்தது.

''யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும் ஆரம்ப நடவடிக்கையாக குடாநாட்டுத் தொடுவாயில் இராணுவம் நிறுத்தியிருந்த படையணி தாக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை இது மோசமான காலம்'' என்றது, பி.பி.சி.

''கட்டைக்காட்டில் கைப்பற்றிய இலட்சக் கணக்கான ரவைகளாலும், நூற்றுக்கணக்கான ஆயுதங்களாலும், புலிகளின் பலம் கணிசமான அளவு அதிகரித்துவிட்டது'' எனப் படைத்துறைத் தலைமை கலங்கியது.

''விடுதலைப் புலிகளுக்குக் கடல்மூலம் ஆயுதங்கள் வருவதைத் தடுப்பதில் கடற்படையினர் ஈடுபட்டிருக்கும்போது, தரையில் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் புலிகள் எம்மிடமிருந்தே அள்ளிச் சென்றிருப்பது, ஏமாற்றத்தையும்விரக்தியையும் தருகிறது'' என,கொழும்பில் நிகழ்ந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அட்மிரல் கிளான்சிபெர்னாண்டோவுடன் கொல்லப்பட்ட லெப். சன்குன் குணசேகர, தான் இறப்பதற்கு முன் தன்னைச் சந்தித்த பத்திரிகையாளர் ஒருவரிடம் சொன்னார்.

## தரையில் சண்டையிட வான்படை மறுப்பு

தமிழீழத்தின் தென்பிராந்தியத்தில், தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான வான்படையினர், தம்மால் தரைச்சண்டையில் ஈடுபட முடியாதென படைத்துறைத் தலைமையுடன் முரண்பட்டுள்ளனர்.

28-01-1992 அன்று அம்பாறை - மகா ஓயா வீதியில் அரந்தலாவை எனும் இடத்தில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில், வான்படையினர் வந்த பஸ்வண்டி சிக்கியது. இத்தாக்குதலில் ஒரு வான்படை உயரதிகாரி உட்பட 30இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர்; 30 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் வான்படையினராவர்.

இத் தாக்குதலின் பின், மீட்பு வேலைக்கென வந்த வான்படையணி தாக்கப்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட்டு, சிலர் காயமடைய, அந்த அணி திரும்பிச் சென்றது.

29-02-1992 அன்று திருக்கோணமலை வேப்பங்குளம் வான்படைமுகாமிலிருந்துரோந்துசென்ற வான்படையினர் தாக்கப்பட்டனர். இத்தாக்குதலின் போது 23 படையினர் கொல்லப்பட்டதுடன், 23 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

03-07-1992 அன்று, பன்குளம் நான்காம் கண்டம் படைமுகாமிலிருந்து ரோந்துசென்ற வான்படை அணி தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டனர்; 8 ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

03 - 11 - 1992 அன்று காலை, அம்பாறை வொறப்பனை விமானப்படை முகாமிலிருந்து ரோந்து சென்றுகொண்டிருந்த ரோந்துப் படை மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்த்தாக்குதலில், 13 விமானப்படையினர் உட்பட 25 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர். 20 நவீன ஆயுதங்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன.

தரைவழியாகத் தாம் செயற்படுகின்றபோது புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாவதுடன், பலத்த இழப்புக்களையும் சந்திக்கவேண்டி ஏற்படுவதால், வான்படையினர் மனப்புழுக்கம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக, தரைச் சண்டைகளில் தாம் ஈடுபட முடியாதென படைத்துறைத் தலைமையுடன் முரண்பட்டுள்ளனர்.

தரைச் சண்டைகளில் ஈடுபடுமாறு அரசு தம்மை நிர்ப்பந்திப்பதாகவும், உலக அரங்கில் இதுபற்றி விவாதித்து தமக்கு விமோசனம் பெற்றுத் தருமாறும் அவர்கள் பி.பி.சி. இற்குக் கடிதமொன்றை எழுதியுள்ளனர்.

## தென் தமிழீழம் மீதான வெற்றிபெறாத இராணுவ நடவடிக்கைகள்

8-11-92 அன்று மட்டக்களப்பில் 'ஜயபார' என்ற இராணுவ நடவடிக்கையை சிங்களப்படையினர் ஆரம்பித்தனர்.

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களினால் போர் உறுதி குலைந்து - குழம்பிப் போயிருந்த படையினருக்குத் தெம்பூட்டவும், படைகள் சந்தித்திருந்த பாரிய பின்னடைவை மூடிமறைப்பதற்குமே - படைத்துறைத் தளபதியாகத் திரும்பவும் பொறுப்பேற்ற ஜெனரல் கமில்டன் வணசிங்க, இத்தாக்குதலை ஆரம்பித்தார்.

''இதுவரை கிழக்கில் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் மிகப் பெரியது இது'' என, படைத்தலைமைமார்தட்டியது. ''மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து புலிகளை முற்றாக வெளியேற்றும் முதலாவது நடவடிக்கை இதுவாகும்'' எனவும் விளம்பரப்படுத்தியது.

ஆனால் இரண்டு நாட்கள் நடந்த இந்நடவடிக்கையின்போது, ஒரு புலிவீரனைத்தானும் படையினரால் கொல்ல முடியவில்லை என்பதுடன், இராணுவ உலங்குவானூர்தி ஒன்றையும் அதற்குள்ளிருந்த ஓர் அதிகாரி உட்பட 4 படையினரையும் அவர்கள் இழந்தனர் என்பதும், குறிப்பிடத்தக்கது.

(11ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளுக்குப் புகழ்மாலை

**இந்தப் போராண்டில், எமது செயற்பாடுகள் பலதரப்பட்டவர்களையும் எம்மைப் பற்றி வியந்துரைக்க வைத்துள்ளன. சிறீலங்காவினதும் வெளிநாடுகளினதும் இராணுவ - அரசியல் ஆய்வாளர்கள், இப்போராண்டில் நடந்த வியத்தகு சாதனைகளை மனதில் வைத்து, தலைவர் பிரபாகரனுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் புகழாரம் சூட்டியுள்ளார்கள். புலிகளுக்கெதிரான போரை வழிநடத்தும் அதியுயர் தளபதிகளிலிருந்து, அரச தரப்பு உயர்அதிகாரிகள், எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், சிங்கள விமர்சக எழுத்தாளர்கள் மட்டுமன்றி, இனவெறியைக் கக்குகின்ற சிங்கள இனவாதிகளும்கூட, தலைவர் பிரபாகரனையும் புலிப்படையையும் புகழ்ந்து – வெளிப்படையாகக் கூறியிருப்பது ஒரு சிறப்பான விடயமாகும். தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலில் வளர்ந்த எமது வீரர்களின் வீரமும் ஆற்றலும் அர்ப்பணிப்புகளும் செயல்களுமே, எம்மைப்பற்றித் தமது மனக்குகைக்குள் புதைந்திருந்த கருத்துக்களை வெளியில் சொல்ல இவர்களைத் தூண்டின என்பதே உண்மையாகும். எதிரிகளே எம்மைப்பற்றி வியந்துகூறும் அளவிற்கு அமைந்த எமது வீரர்களின் அபார சாதனைகள், இப்போராண்டில் விடுதலைப் போராட்டத்தை ஒருபடி உயர்த்தியிருக்கின்றன என்றால் மிகையாகாது. அவ்வாறாக இப்போராண்டில் புலிகளுக்குச் சூட்டப்பட்ட புகழ்மாலைகளில் சில இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.**



''கெரில்லா யுத்தங்களைத் திர்ப்பது எளிதான காரியமல்ல; அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். அதுவும், உலகில் உள்ள மிகச் சிறந்த கெரில்லா இயக்கங்களில் ஒன்றான புலிகளை முறியடிப்பதென்பது, தண்ணீர் குடிப்பது போல இலகுவில் நடக்கக்கூடிய காரியம் அல்ல. விடுதலைப் புலிகள் தமிழீழம் அடையும் தமது இலட்சியத்தில் உறுதியாக நிற்பதை நான் பெரிதும் மதிக்கின்றேன்''!

— ***காமினி திசாநாயக்க***
*(முன்னாள் அமைச்சர்)*
***ஈழநாடு*** *- 12.01.1992*

'' மக்களில் புலிகளைப் பிரிப்பது என்பது நடவாத காரியம்; விடுதலைப் புலிகளுக்கு எதிரான காழ்ப்பு, எதிர்ப்பு எதுவும் அறவே கிடையாது... ..

...... புலிப்படையினரின் புதிய காவல் துறையினர், நீலநிறச் சீருடையில் புலி இலச்சினையுடன் நிற்பதுமன்றி சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவற்றைக் கட்டிக்காக்கும் நோக்குடன் காவல் உலா வருகின்றனர்......''

— ***கிறிஸ்தோபர் மொறிஸ்***
***பி. பி. சி. வானொலி***
*01.02.1992*

'புலிகள் தனியானவர்கள் அல்ல; அவர்கள் ஒரு திரண்ட மக்கள் கூட்டமாக இருக்கின்றார்கள். சிங்களச் சிப்பாய்களிடம் இருப்பதைப் போல் அவர்களுக்குப் போர் வெறியில்லை. ஆனால், உணர்வுபூர்வமாகப். போரிடுவதை விரும்புகின்றார்கள். பொருளாதாரத் தடையால் மக்கள் புலிகள்மீது கோபமடையக்கூடும் என்ற உங்கள் எதிர்பார்ப்பு,பொய்த்துப் போய்விட்டது. உங்களுடைய இராணுவத்தினர், விடுதலைப் புலிகளோடு மட்டுமன்றி தமிழ்ப் பொதுமக்களுடனும் போரிடவேண்டிய நிலை ஏற்படும்'.

— ***பேராசிரியர் பீற்றர் சோல்க்***
*(ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எழுதிய கடிதமொன்றில்)*
***ஈழநாதம்*** *-15.2.1992*

'தமிழகத் தமிழர்களும் பாதிப்படைகின்றபோது தலைவர் பிரபாகரனையே நினைக்கின்றார்கள்.'

முதலையிடம் மாட்டிய யானை ஆதி முதலோனே என்றதாம். திரௌபதியைத் துச்சாதனன் துகில் உரிந்தபோது பரந்தாமனை அழைத்தாளாம். அதேபோல், தமிழர்கள் பாதிக்கப்படுகின்றபோது தலைவர் பிரபாகரனையே நினைக்கின்றார்கள்'.

— ***பண்ருட்டி ராமச்சந்திரன்***
*(கர்நாடக மாநிலத்தில் தமிழர்களுக்கெதிரான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட வேளையில் கூறியது.)*
***உதயன்*** *- 28.2.1992*

'அரசியல் தீர்க்கதரிசனத்தைத் தலைகீழாக மாற்றிவிடும் அபார சக்தி படைத்தவர்கள் புலிகள். இலங்கையின் எல்லா இடங்களிலும் அவர்கள் தாக்குதல் நடாத்துகின்றார்கள். யாழ்ப்பாணம் மீது சிங்களப் படை தாக்கினால், சிங்கள தேசத்தில் திருப்பித் தாக்கும் பலம் புலிகளுக்கு உண்டு' என, பிரபல இந்தியப் பத்திரிகையான 'புரொன்ட் லைன்' கூறுகிறது.

***ஈழநாதம்*** *- 02.03.1992*

விடுதலைப் புலிகள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்கள்; இவர்களைத் தோற்கடிப்பது என்பது இயலாத காரியம். நாட்டுக் கரந்தடிப் போர் உத்தியிலும்சரி, காட்டுக் கரந்தடிப் போர் உத்தியிலும்சரி விடுதலைப் புலிகள் வலிமைபெற்று, உலக அரங்கில் தன்னிகரில்லாது தலைதூக்கி நிற்கின்றார்கள் என்பதில் இருகருத்து இருக்க முடியாது. சிறீலங்கா அரசு 'ரி. 85' ரக தாங்கிகள், பெரும் படையணிகளுடன் யாழ்ப்பாணம்மீது மேற்கொள்ள நினைக்கும் படையெடுப்பு வெற்றியளிக்கும் என்பது சந்தேகமே.

***பி. பி. சி. வானொலி***
*09.03.1992*

தமிழீழ விடுதலைப் புலிகள் உலகிலேயே மிகத் தலைசிறந்த ஒரு கெரில்லா இயக்கமாகும். இது சிறந்த பயிற்சியையும், இறுக்கமான கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளது. புலிகளுக்குத் தலைமை தாங்கிப் போரை நடாத்திவரும் திரு. பிரபாகரன், தான் ஆற்றல் மிகுந்த தலைவர் என்பதை நிரூபித்துள்ளார்'.

— ***ஜெனரல் ஹமில்ட்டன் வணசிங்க***
*(சிறீலங்காப் படைத்துறைத் தளபதி)*
***சண்டே ரைம்ஸ்*** *- 8.8.1992*

'விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது தமிழர்களை அழிப்பதற்கு ஒப்பானதாகும். தமிழர்கள் இருக்கும்வரை புலிகளும் இருக்கவே செய்வார்கள். சரியோ பிழையோ புலிகளே தமிழர்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பவர்களாவர். தமிழர்களைப் பொறுத்தவரை, புலிகள்தான் அவர்களின் போராட்ட இலட்சியத்தில் உறுதியாக உள்ளார்கள். புலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்களாக உருப்பெற்றுள்ளார்கள்'.

— ***அமைச்சர் தொண்டமான்***
***சண்டே ரைம்ஸ்*** *-22.3.1992*

'விடுதலைப் புலிகள் மிகவும் பலம்வாய்ந்த சக்தி. புலிகளுடன் பேசாமல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது'.

— ***நெவில் கனகரட்ண***
*(இந்தியாவிற்கான சிறீலங்காத் தூதர்)*
***ஈழநாதம்*** *- 9.3.1992*

புலிகளிடம் பிரமிக்கத்தக்க மனோதிடம் இருந்து வருகின்றது. போர்முனையில் புலிகளிடம், குறிப்பாகப் பெண் போராளிகளிடம் தீவிர இலட்சிய வேட்கையையும், ஆக்ரோசமாகப் போராடும் துணிவையும், காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த அலாதியான போர்த்திறனால் எதிரிகளின் பெருமதிப்பைக் கூட அவர்கள் பெற்றுள்ளார்கள். புலிகள் மேற்கொள்ளும் திடீர் தாக்குதல்கள் இராணுவப் பலத்தைச் சிதறடிப்பதாக உள்ளன'.

***சண்டே ரைம்ஸ்*** *- 19.04.1992*

'ஆயுதங்கள்தான் எமது உயிர்நாடி. ஆயுதங்கள் இருப்பதாலேயே நாம் பாதுகாக்கப்படுகின்றோம். ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு கூறி எம்மை அழிக்க முயற்சிக்காதீர்கள். எம்மை நிம்மதியாக எமது சொந்தமண்ணில் வாழவிடுங்கள்.'

— ***மரக்கறி விற்கும் ஒரு பெண்.***
*(25-4-92 இல் யாழ்நகர் வந்த பௌத்த பிக்குகளிடம் கூறியது.)*

''எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம்; மாபெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறோம்; உலகமே வியக்கும் வகையில் வீர காவியங்களைப் படைத்திருக்கிறோம். எமது போராளிகளின் அபாரமான துணிவும், விடா முயற்சியும், தளராத உறுதியுமே இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. எதற்கும் துணிந்தால், விடாது முயற்சிகளை எடுத்தால், உறுதியோடு இயங்கினால் எந்த சாதனையையும் சாதித்துவிடலாம். எமது இயக்கத்தின் இராணுவ வெற்றிகள் இந்த உண்மையையே எடுத்தியம்புகின்றன''.

— **தலைவர் பிரபாகரன்**

www.eelamview.com

www.eelamview.com



# வெற்றிகளால் நிறைந்த 1992

' புலிகள் ஓர் உள்ளுணர்வுடன் போராடுகின்றார்கள். ஒரு இலக்கினை அடைவதற்கு தந்திரோபாயங்களைக் கையாள்கின்றார்கள். போர்முறையில் நன்றாகப் பயிற்றப்பட்ட அவர்களிடம் குடிப்பழக்கம் இல்லை; அவர்கள் புகைப்பதில்லை, கொள்ளையடிப்பதில்லை, களவெடுப்பதில்லை; மற்றும் பெண்ணாசையும் இல்லை. அவர்கள் துணிவு, கட்டுப்பாட்டுடன் போராடுகின்றார்கள்'.

— **லெப்.ஜெனரல் சிசில் வைத்யரத்னா**
(சிறீலங்கா இராணுவத் தளபதி)
**அவர் எழுதிய கைநூலில்.**

'தமிழக மக்களின் இதயங்களிலிருந்து திரு. பிரபாகரனைப் பிரித்துவிட முடியாது. இம் முயற்சியில் இந்திய அரசு தோல்வியடைவது திண்ணம்.'

— **ப. நெடுமாறன்**
('தமிழ் நேஷன்' ஆங்கில இதழ் பேட்டியில்.)
**ஈழநாதம்** - 5.5.1992

'இந்திய சிறீலங்கா அரசுகள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்கின்றன. ஆனால், அதே அளவுக்கு, அவர்கள் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் என்பதே உண்மையாகும். தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கவே விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு நிற்கிறது. ஆற்றுவெள்ளம் போல தமிழ் இளைஞர்கள் புலிகளுடன் இணைந்துகொள்கின்றனர். எந்தவொரு இராணுவச் சக்தியாலும் புலிகளை அழித்துவிடமுடியாது.'

— **மேஜர் அர்ஜுன் கடோட்ஜன்**
(தமிழீழத்திலிருந்த இந்தியப் படையின் துணைப்படைப் பிரிவுத் தளபதி.)

'இந்தியாவும், சிறீலங்காவும் கூட்டாக இராணுவ நடவடிக்கை எடுத்தாலும் — எந்த இராணுவத் தலையீட்டையும் எதிர்த்துப் போரிடக் கூடிய சக்தியுடனேயே புலிகள் உள்ளனர்.'

— **சாமிந்ரா பெர்னான்டோ**
(இராணுவ விமர்சகர்)
**சண்டே ஐலண்ட்** - 17.5.1992

இலங்கையின் வடக்கு சுதந்திரத் தமிழீழமாகவே உள்ளது. விடுதலைப் புலிகள் வரி வசூலிக்கின்றனர்; பாஸ்போட் வழங்குகின்றனர்; நிர்வாகத்தை நடத்துகின்றனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பின்றி ஒரு தீர்வை நடைமுறைப்படுத்த முடியும் என்பதை என்னால் சிந்தனைசெய்துபார்க்க முடியவில்லை.

— **குல்தீப் நய்யார்**
(பிரபல பத்திரிகையாளர்; பிரித்தானியாவிற்கான முன்னாள் இந்தியத் தூதுவர்.)
**சண்டே ஐலண்ட்** - 07.06.1992

'தனித்தமிழ்நாடொன்றை உருவாக்குவதில், புலிகளின் தலைவருக்கு இருக்கும் உறுதிப்பாடு சந்தேகத்திற்கு இடமற்றது இந்த இலட்சியத்திற்காக, ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் உயிர்களையும் தியாகம் செய்ய அவர் தயாராயிருக்கின்றார். அத்துடன், தமிழீழம் என்ற இலட்சியத்தை அடைவதற்காகத் தனது உயிரைக்கூடத் துச்சமாக மதிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.'

— **தோமஸ் ஏபிரகாம்**
('இந்து' பத்திரிகையின் அரசியல் ஆய்வாளர்.)
**ஈழநாதம்** - 12.7.1992

'விடுதலைப் புலிகளுடன் போரிட அஞ்சி. இதுவரை 7000 ஆயுதப்படையினர் படையிலிருந்து ஓடி விட்டனர். 1990 யூன் 11 ஆம் நாள் மீண்டும் போர் வெடித்ததின் பின் காயமடைந்த படையினரில் 6000 பேர், திரும்பவும் போருக்குச் செல்ல முடியாது ஊனமுற்றுள்ளனர். இக்காலப் பகுதியில், 3000 இற்குமதிகமான தானியங்கி ஆயுதங்கள் உட்பட, 4000 இற்குமதிகமான ஆயுதங்களைப் படையினர் புலிகளிடம் இழந்தனர்என்பது கொழும்பு வார இதழ் ஒன்றின் செய்தி.

**ஈழநாதம்** - 11.8.1992

'விடுதலைப் புலிகளின் போருபாயங்கள் அதிசயிக்கத்தக்க, துணிச்சல் மிக்கவையாகவும்,வெற்றிகரமானவையாகவும் உள்ளன! தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் 14-02-1977 அன்று முதலாவது பொலிஸ்காரரைச் சிறீலங்கா இழந்தது. நான்கு ஆண்டுகள் கழிய ஒக்ரோபரில் முப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஜெனரல் ஒருவர் கொல்லப்படும் சாத்தியம் பற்றி அப்போது எவரும் எண்ணியிருக்க மாட்டார்கள். இருந்தும் இப்போது அது நடந்துவிட்டது.'

— **ஒரு சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி.**
**சண்டே ஐலண்ட்** - 16.8.1992

'இன்னும் எட்டு ஆண்டுகளில் சிறீலங்காவின் வடக்கில் 'ஈழம்' என்ற ஒரு சுதந்திரத் தமிழ் நாடு உருவாகும்' என, அமெரிக்க வெளியுறவு அமைச்சின் அனுசரணையுடன் இயங்கும் விற்பன்னர்கள் குழு, ஒரு தீர்க்கதரிசனத்தை வெளியிட்டுள்ளது. உயர் நிலை அரசியல் புவியியலாளர்களும், எதிர்காலக் கணிப்பாளர்களும் அடங்கும் ஆறு கல்விமான்களின் இவ் அறிக்கையைத் தூக்கி எறிந்துவிடுவது, புத்திசாலித்தனமானது அல்ல.

— **மேர்வின் டீ சில்வா**
(பிரபல அரசியல் விமர்சகர்)
**சண்டே ஐலண்ட்** - 13.9.1992

'மிகவும் நுட்பமாக - அவதானமாக - தாக்குதல் திட்டங்களை வகுத்தல், இராணுவ நடமாட்டம் பற்றி நீண்டகாலம் விடாமுயற்சியுடன் வேவு பார்த்தல், எதிர்பாராத வகையில்-திகைப்பூட்டும் விதத்தில் - கடுகதி வேகத்தில் தாக்குதலை நடத்தி முடித்தல் - இத்தகைய பண்புகள்தான் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகளுக்கு,அடிப்படையாக அமைந்துள்ளன.

— **றொகான் குணசேகர**
(இராணுவ விமர்சகர்)
**சண்டே ஐலண்ட்** - 27.9.1992

எந்த இனத்துக்கும் தனது எதிர்காலத்தையிட்டு முடிவுசெய்ய உரிமை உண்டு. எந்த ஒரு இனமும் தனது வெற்றிக்காகப் போராடுமானால் அது அந்தத் தேசிய இனத்தின் உரிமை. அதுபோலவே தமிழ் இளைஞர்களும் போராடுகின்றார்கள்; விடுதலைப் புலிகள் யுத்தத்தின் மூலம் வெற்றியடைய முனைகின்றார்கள். அதாவது, ஆயுதப்போராட்டத்தின்மூலம் தமிழீழ அரசை வென்றெடுக்கப் போராடுகின்றார்கள். தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்தத் தீர்வும் பிரச்சினையைத் தீர்க்காது.

— **ரெறன்ஸ் புரசிங்ஹா**
(சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறை)
**லங்காதீப** - 4.10.1992

'விடுதலைப் புலிகளின் சரித்திரத்தைப் பார்த்தால் போரிடவேண்டும் என்ற வெறும் உத்தியிலும் பார்க்க, கணக்குப்பார்த்து மேற்கொள்ளப்பட்ட பல அரசியல் நகர்த்தல்களால்தான், அந்த இயக்கம் இப்போது இராணுவ வலிமை பெற்றதாக வளர்ச்சியடைந்திருக்கின்றது என்ற உண்மை, புலனாகும். இந்தியப்படையின் நடவடிக்கைகளை முறியடிக்க திரு. பிரபாகரன், தொடராகப் பல அரசியல் நகர்த்தல்களை மேற்கொண்டார் என்பது நன்கு தெரிந்த விடயமாகும்.'

— **தாரகி**
(அரசியல் பத்தி எழுத்தாளர்)
**சண்டே ஐலண்ட்** - 11.10.1992

தற்கொலைக் கொலையாளி ஒருவரின் கொள்கைத் தீவிரத்திலிருந்து யாருக்குமே பாதுகாப்பு வழங்குவது இயலாத காரியமாகும். தமிழீழக் கொள்கைக்காக உயிரிழக்கத் தயாராக இருப்பது - குறிப்பாக தற்கொலை செய்யவும் தயாராக இருப்பது - புலிப்படையினர் கடைப்பிடித்துவரும் தலையாய சிலமாகும்.

**பி. பி. சி· வானொலி**
16.11 1992

'தியாகம், துணிச்சல், யுத்தம் செய்யும் முறை இவற்றை விடுதலைப் புலிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஜே.வி.பியினர் ஒரு சயனைட் வில்லையைக்கூட வைத்திருக்கவில்லை. புலிகளின் தியாக உணர்வு வேறு எவரிடமும் கிடையாது.

— **காமினி பொன்சேகா**
(உப சபாநாயகர்)
**நாடாளுமன்ற உரை** - 23.11.1992

'விடுதலைப் புலிகள், எங்கேயும் எப்போதும் விரும்பும் சமயத்தில் தாக்குதல் நடத்த வல்லவர்கள். தீர்க்கமான, இறப்பதற்குத் துணிந்த அவர்களின் தற்கொலைப் படையினரின் தாக்குதலைத் தடுப்பது என்பது சாத்தியமற்றதாகும்.'

— **அனுருத்த திலகசிறி**
(அரசியல் விமர்சகர்)
**சண்டே ஒப்சேவர்** - 29.11.1992

'தமிழ்த் தேசிய வாதத்தின் வெளிப்பாடாக திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் எழுந்து நிற்கிறார் என்பதை, எவரும் மறுக்க முடியாது.'

— **காமினி நவரட்ண**
(பிரபல பத்திரிகையாளர்)
**சண்டே ரைம்ஸ்** - 6.12.1992

படைத்துறையின் எண்ணங்களையும், போர்க்கள நிலவரங்களையும் ஆராய்ந்தறிந்தபின் புலிகள் தங்களது கடற்புலி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்கிறார்கள். இந்தவகையில் ஒருநாள், கடல்வழிமூலம் தரையிறக்கப்பட்டு நடாத்தப்பட்டும் படையினரின் கூட்டு நடவடிக்கைகள் பெரும் சிரமத்திற்குள்ளாகலாம். அதாவது இத்தகைய கடல் - தரைவழி இணைந்த இராணுவ நடவடிக்கைகளை நடாத்த முடியாதவாறு தடுக்குமளவுக்கு, கடற்புலிகளின் நடவடிக்கைகள் அமையலாம். தரையில் புலிகள் காட்டும் திறமைகளுடன் தீவிரமடைந்துவரும் கடற்புலிகளின் நடவடிக்கைகளும் ஒன்றிணைந்து, பாதுகாப்புப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளை முடக்கலாம். இது வடபிராந்திய போர்க்களத்தில் புலிகளின்கையை ஓங்கச் செய்துவிடும்.

— **சாமிந்ரா பெர்னான்டோ**
**சண்டே ஜலன்ட்** - 13.12.1992 ❋

# வெற்றிகளால்...

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமில்லாத வகையில் சிறீலங்காவின் கடற்படையும், விமானப்படையும் இப்போராண்டில் கணிசமான அளவில் உயிரிழப்பையும், பாரிய பொருளிழப்புகளையும் சந்தித்துள்ளன.

தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படைக்குச் சவாலாக கடற்புலிகள் தீரம் காட்டியுள்ளனர், கடலிலே பல சாதனைகளைப் படைத்துள்ளனர்; இப்போராண்டில் கடற்புலிகள் கண்ட வளர்ச்சி சிங்களப் படைத்துறையைத் திடுக்கிடவைத்துள்ளது.

சிறீலங்காவின் வான்படையும் இப்போராண்டில், அதன் வரலாற்றில் என்றுமேயில்லாத அளவுக்குப் பாரிய இழப்புகளைச் சந்தித்துள்ளது.

தென்தமிழீழ எல்லைப்புறங்களில் தரை ரோந்துகளில் ஈடுபட்ட வான்படையினர் புலிகளின தாக்குதல்களுக்கு உள்ளான சம்பவங்கள் பல, நடந்துள்ளன. இத்தாக்குதல்களின்போது கணிசமான அளவில் வான்படையினர் கொல்லப்பட்டுமிருந்தனர்.

இதேவேளை இப்போராண்டில் சிறீலங்காவின் வான்படை, ஒரு வை-8ரக இராட்சத விமானத்தையும் ஒரு உலங்கு வானூர்தியையும் இழந்துள்ளது. இவைதவிர சீனன்குடா விமானத்தளத்தில் நடந்த ஒரு குண்டு வெடிப்பில், வான்படை பலத்த இழப்பைச் சந்தித்ததும் குறிப்பிடத்தக்கது.

இவற்றுடன் ஒரு படையின் மிகப்பிரதான அம்சங்களில் ஒன்றான போரிடும் உறுதியும், சிங்களப் படையைப் பொறுத்தளவில் இவ்வாண்டு, பலத்த சேதத்திற்கு உள்ளாகிவிட்டது.

அடுத்தடுத்து சிங்களப் படைகள் சந்தித்துவரும் பேரிழப்புகள், ஆச்சரியமூட்டும் வகையில் புலிகள் நடாத்தும் அதிரடிகள், மூர்க்கத்துடன் முன்னேறிவரும் புலிவீரர்களின் நெஞ்சுறுதி, மனித குலத்தையே பிரமிக்கவைக்கும் அபாரமான தியாகங்கள் என்பன, சிங்களப் படைகளைப் பயப்பிராந்தியுள் ஆழ்த்தியுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் சிங்கள இராணுவ இயந்திரத்தை ஈடாட்டம்காணச் செய்யுமளவுக்கு, இப்போராண்டு பல சாதனைகளைத் தாங்கி வெற்றியில் திளைக்கின்றது. ❋

www.eelamview.com

www.eelamview.com



# சிங்களப் படைகளின் போரிடும் உறுதி சரிவு

**சிங்களப் படைகளின் போரிடும் உறுதி இப்போராண்டில் பலத்த சீரழிவைச் சந்தித்துவிட்டது. அதன் விளைவாய் படைகளை விட்டு ஓடி விடுவோரின் தொகை வெகுவாக அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் படைக்கு ஆள்சேர்வதும் பெருமளவு குறைந்துவிட்டது. சண்டைக்களங்களில், உருக்கின் உறுதியுடன் – இலட்சிய வேட்கையுடன்– தியாக சிந்தையுடன் முன்னேறி வரும் புலிப்படை வீரர்களை எதிர்கொள்ள அஞ்சியே இவர்கள் ஓட்டமெடுக்கின்றனர். பலர் தம்மைத்தாமே துப்பாக்கியால் சுட்டுக் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு, சமர் முனைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கினர். 'எந்த நேரம் புலிகள் பாய்வார்களோ' என்ற பீதியுடன் ஒவ்வொரு நிமிடத்தையும் கழித்துக்கொண்டு இருந்ததால் மனநிலை பாதிப்படைந்த பலர், தற்கொலைகூடச் செய்துள்ளனர்.**

**படையை விட்டு இவ்வளவு பெருந்தொகையில் ஆட்கள் விலகி ஓடுவதானது, சிங்களப் படைத்துறைத் தலைமைக்கும் சிறிலங்கா அரசுக்கும் பெருத்த தலையிடியைக் கொடுத்துள்ளது. சிறிலங்காவினதும் வெளிநாடுகளினதும் செய்தியாளர்கள் மட்டுமன்றி, அரச தரப்பினரும் படைத்தளபதிகளும் கூட, இராணுவத்தை விட்டுப் பலர் ஓடுவதை ஒப்புக்கொண்டுள்ளனர்.**

தென்னிலங்கையில், ஏப்பாகந்த என்ற கிராமத்தைச் சேர்ந்த ஏ. டி. ஜி. நிமால் குமார (23) என்ற இராணுவச் சிப்பாய் விடுமுறையில் வீட்டுக்கு வந்தார். திரும்பவும் கடமைக்குச் சென்றால் தன்னை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவிடுவார்கள் என அஞ்சி, அவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

*உதயன் — 01.02.1992*

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த 27 படைச்சிப்பாய்கள், இராணுவத்தை விட்டு ஓடிவிட்டனர். எனினும், இவர்களில் 10 பேர் பின்னர் கைதுசெய்யப்பட்டனர் என, மாத்தளை பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்ரர் யூ. டபிள்யூ. உமகிலிய தெரிவித்தார்.

*உதயன் — 02.02.1992*

புலிகளின் துணிகரமான – தொடர்ச்சியான தாக்குதல்களினால் படையினர் மத்தியில் பெரும் மனத்தளர்வு ஏற்பட்டுள்ளது. புலிவீரர்களுக்கு முகங்கொடுக்க அஞ்சி, பல்லாயிரக் கணக்கில் படையினர் இராணுவத்தைவிட்டு ஓடிவிட்டனர். கடந்த 3 வருடங்களில் 4000 வரையானோர் ஓடிவிட்டனர்.

*சண்டே ஐலண்ட் — 29-03-1992*

இராணுவத்திலிருந்து 4000 பேர் ஓடிவிட்டனர். புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் மனவுறுதி குலைந்த நிலையில் இவர்கள் ஓடினர்; பலர் தம்மைத் தாமே காயப்படுத்திக்கொண்டு செல்கின்றனர்; சிலர் தற்கொலைகூடச் செய்துள்ளனர்.

*சண்டே ஐலண்ட் — 21.06.1992*

புலிகளுக்கு எதிரான போரைத் தொடர இராணுவத்தில் ஆட்பற்றாக்குறை நிலவுகிறது. எனவே புலிகளுடன் போரிடப் பயந்து படையை விட்டு ஓடிய ஏறக்குறைய 4000 பேரைத் திரும்பவும் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள, படைத் தலைமை முடிவுசெய்துள்ளது.

*ஈழநாதம் — 17.07.1992*

சிங்கள இளைஞர்கள் படையில் சேர முன்வரினும், புலிகளுக்கு எதிரான போரில் பங்குபற்ற அவர்கள் அஞ்சுகின்றனர். சிலர் சுகயீனம் என்று படுத்துவிடுகின்றார்கள். தெரிந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு அம்மா மரணப்படுக்கையில்; வடக்கே போக முடியாது என்றுசாக்குச் சொல்கிறார்கள். புலிகளின் மன உறுதி, கட்டுப்பாடு என்பனவற்றைச் சிங்களப் படை ஒருபோதும் எட்டமுடியாது.

— *சகரான கௌடில்யா*
*(பிரபல இராணுவ விமர்சகர்)*
*சண்டே ஐலண்ட் — 19. 07. 1992*

விடுதலைப் புலிகளுடனான தரைச்சண்டையில் ஈடுபடுமாறு சிறிலங்கா அரசு தம்மை வற்புறுத்தி வருவதாக, வான்படையினர் முறையிட்டுள்ளனர். இதனால், அதிகளவில் வான்படையினர் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகின்றனர் - தரைச்சண்டையில் ஈடுபட தம்மால் முடியாது எனவும், அவ்வாறு ஈடுபடுவதாயின் தாம் பதவி விலகத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக உலக அரங்கில் விவாதித்து தமக்கு விமோசனம் பெற்றுத் தருமாறு, பி. பி. சியைக் கடிதமூலம் கேட்டுள்ளனர்.

*ஈழநாதம் — 03.08.1992*

விடுமுறையில் செல்லும் படையினர் மீண்டும் கடமைக்குத் திரும்பாமல் தலைமறைவாகி விடுகின்றனர். இராணுவத்தில் சேர்வதற்கும் தென்பகுதி இளைஞர்கள் முன்வருவதில்லை. மாத்தறையில் உள்ள தென் பிராந்திய இராணுவத் தலைமையகத்தில் நடந்த ஆள்திரட்டல் நேர்முகப் பரீட்சைக்கு இரண்டுபேர் மட்டுமே சமுகமளித்தனர் என்பது, குறிப்பிடத்தக்கது.

*உதயன் — 15. 09. 1992*

21.09.1992 அன்று, மட்டக்களப்பு காயங்கேணியில், படையினர் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியபோது, உடனடியாகப் பொலிசார் உதவிக்கு அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்களில் 13 பொலிசார் சீருடைகளைக் களைந்து விட்டு சிவில் உடையுடன், லொறி ஒன்றைக் கடத்தித் தப்பினர்; எனினும், இவர்கள் மற்றொரு சோதனைச் சாவடியில் பிடிபட்டனர்.

*உதயன் — 22.09.1992*

திருக்கோணமலை எல்லையில் கெபிற்றிகொல்லாவ பொலிஸ் நிலையத்தில் கடமைபுரிந்த ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட 21 பொலிசார், அங்கிருந்து ஓடிவிட்டனர். வவுனியாவில், குடாக்கச்சி கொடுவ கிராமத்தில் பாதுகாப்புக்கென அனுப்பப்பட்ட 14 பொலிசார் சீருடைகளைக் களைந்து விட்டுத் தப்பியோடியபோது, ஒரு சோதனைச் சாவடியில் அகப்பட்டனர்.

*ஈழநாதம் — 22.09.1992*

விடுதலைப் புலிகளின் அதிகரித்து வரும் தாக்குதல்களால் இராணுவத்திலிருந்து விலகி ஓடுவோரின் தொகை வரவர அதிகரிக்கின்றது. இது படைத்துறைக்கு பெரும் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளது. படையிலிருந்து ஓடியவர்களைக் குறைந்த தண்டனையுடன் மீளவும் சேர்க்க முடிவுசெய்யப்பட்டது. ஆனால், அதுவும் பயன்தரவில்லை; புதிதாகப் படைக்கு ஆள்திரட்டும் முயற்சியும் வெற்றி தருவதாக இல்லை.

— *ஜேர்மன் வானொலியின்*
*கொழும்புச் செய்தியாளர்.*
*உதயன் — 9.10.1992*

சிங்களப் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் படையில் சேருவதை விரும்பவில்லை. படையில் சேரவேண்டாம் என்று தமது பிள்ளைகளை அவர்கள் அதைரியப்படுத்துகின்றனர். போரில் வெற்றியீட்டவேண்டும் என்ற அக்கறை மக்களின் பிரதிநிதிகள் பலரிடம் அற்றுப்போய்விட்டது.

— *காமினி ஜெயசூரியா*
*(முன்னாள் அமைச்சர், சிங்கள பாதுகாப்புச் சங்கத் தலைவர்)*
*சண்டே ரைம்ஸ் — 11.10. 1992*

மனதைக் கிலேசப்படுத்தும் வகையில் படையினரின் மனோதிடம் குறைந்து வருவது இன்று தெளிவாகத் தெரிகின்றது. சில வருடங்களுக்கு முன் படையில் சேர இளைஞர்கள் வரிசையில் நின்றார்கள். அதனை இப்போது, காண முடிவதில்லை. இந்த வருடத்தில் 3000 பேரும், சென்ற வருடத்தில் 4000பேரும் படையை விட்டு ஓடிவிட்டார்கள். கனிஷ்ட மற்றும் நடுத்தர இராணுவ அதிகாரிகள்கூட இராணுவத்தை விட்டு விலகும் எண்ணத்தைக் கொண்டுள்ளனர்.

— *றொகான் குணசேகர*
*ஐலண்ட் — 25. 10. 1992*

படையிலிருந்து ஓடுவோர் பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளிவருகின்றன. இரண்டு வருடங்களுக்கு முன் படையில் சேர இளைஞர்கள் வரிசையில் காத்துக் கிடந்ததை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆர்வத்துடன் படையில் இணைந்து கொண்ட இளைஞர்கள் போரிடும் விருப்பத்தை இழந்து விட்டனரா? அவர்களின் ஆற்றல் குன்றி விட்டதா?.

*ஐலண்ட் — 07.10.1992*

கடந்த ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மட்டும் 1,298 பேர் படையை விட்டு ஓடியுள்ளனர். கடந்த ஆண்டில் மட்டும் 4000இற்கும் அதிகமானோர் படையிலிருந்து விலகியுள்ளனர் என, இராணுவத் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, கொழும்புப் பத்திரிகை ஒன்று கூறுகிறது.

*உதயன் — 29.10.1992*

மாத்தளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த 407 ஊர்காவல் படையினர், இரு வேறு சந்தர்ப்பங்களில் கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களுக்கு மாற்றப்பட்டபோது, ஆயுதங்களைக் கையளித்து விட்டு வேலையிலிருந்து விலகிவிட்டனர்.

*ஈழநாதம் — 11.11.1992*

'புலிகளின் தொடர் தாக்குதல்களினால் படையினர் மத்தியில் களைப்புத் தோன்றியுள்ளது. அவர்கள் இயந்திரமாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நடமாடும் எலும்புக் கூடுகளாக மாறிப்போயுள்ளனர். இத்தகைய கொடூரமான சூழ்நிலைகள் படையினரைச் சண்டைக்குத் தகுதியற்றவர்கள் ஆக்கிவிட்டன' என ஒரு படை அதிகாரி கூறினார்.

— *தினேஸ் வட்டவன.*
*சண்டே ரைம்ஸ் — 29.11.1992*

'மாதாந்தம் குறைந்தது 300 பேர் படையிலிருந்து ஓடுகின்றனர். விடுதலைப் புலிகளுடனான போரில் வெல்லமுடியாது என்ற உணர்வு, படையினர் மத்தியில் ஏற்பட்டுவிட்டது' சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகைக்கு இவ்வாறு தெரிவித்தார்.

*ஈழநாதம் — 5.12.1992*

www.eelamview.com

# வெற்றிகளால் நிறைந்த 1992 இல்

## கொல்லப்பட்ட படையினர் – 1379
## அள்ளப்பட்ட ஆயுதங்கள் – 1284

**கடந்த போராண்டில் 1379 இற்கும் அதிகமான சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். 1284 ஆயுதங்களும், சுமார் 7 இலட்சம் ரவைகளும், பெருந்தொகையான எறிகணைகள், கைக்குண்டுகள், தகவல் தொடர்பு சாதனங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. அவைபற்றிய விபரங்கள் மாதாந்தரீதியாகக் கீழேதரப்பட்டுள்ளன.**

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரில் | மே | யூன் | யூலை | ஓகஸ்ட் | செப்ரெம்பர் | ஒக்ரோபர் | நொவெம்பர் | டிசெம்பர் 22வரை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏ.கே. வகைகள் | 47 | 71 | 55 | 21 | 35 | 24 | 89 | 24 | 55 | 29 | 58 | 16 | 524 |
| ரி.56-II | 20 | 28 | 27 | 09 | 28 | 14 | 53 | 17 | 33 | 16 | 09 | 11 | 265 |
| ஜி.3 ஏ3 | 07 | 01 | 02 | — | 04 | 02 | 01 | 07 | 01 | 02 | 18 | 01 | 46 |
| எஸ்.எல்.ஆர். | — | — | — | 06 | 06 | — | 14 | — | 03 | 02 | 01 | 06 | 38 |
| எஃப்.என்.சி. | — | 01 | — | 05 | — | — | — | — | — | 181 | — | — | 187 |
| 303 றைஃபிள் | 01 | — | 01 | — | 03 | 01 | 18 | 01 | — | — | — | — | 25 |
| பிஸ்ரல் | — | — | — | — | — | — | — | 01 | — | — | 01 | — | 02 |
| சிக்னல் பிஸ்ரல் | 01 | — | — | — | — | — | — | — | 01 | 03 | — | — | 05 |
| சொட்கண் | 02 | — | — | 04 | — | — | — | 01 | 08 | 02 | — | — | 17 |
| ஏ.கே.எல்.எம்.ஜி. | 07 | 06 | 10 | 03 | 07 | 03 | 06 | 07 | 11 | 04 | 11 | 02 | 77 |
| ரி.81 எல்.எம்.ஜி. | — | 01 | — | — | — | — | — | 01 | 02 | — | — | 01 | 05 |
| மினிமி எல்.எம்.ஜி. | — | 01 | — | 01 | 01 | — | — | — | — | 02 | — | — | 05 |
| அல்ட்டிமக்ஸ் எல்.எம்.ஜி. | — | — | — | 01 | — | — | — | — | — | — | — | — | 01 |
| ஜி.பி.எம்.ஜி. | 01 | — | 01 | — | — | — | — | — | — | 01 | 01 | — | 04 |
| பி.கே.எல்.எம்.ஜி. | — | 01 | — | — | — | — | — | — | — | 01 | — | — | 02 |
| 303 எல்.எம்.ஜி. | — | — | — | — | 02 | — | — | — | — | — | — | — | 02 |
| எம்.கே. எம்.எம்.ஜி. | — | — | — | — | — | — | — | — | — | — | 01 | — | 01 |
| எல் 3 எம்.எம்.ஜி. | — | — | — | — | — | — | — | 02 | — | — | — | — | 02 |
| 50 கலிபர் | — | 02 | 01 | — | — | — | — | — | — | 01 | — | — | 04 |
| 203 கிரனேட் பிஸ்ரல் | — | 01 | 04 | 01 | 02 | — | 02 | 01 | 05 | 04 | 01 | 03 | 24 |
| ஆர்.பி ஜி.லோஞ்சர் | 01 | 03 | 03 | — | 02 | — | 01 | 01 | 03 | 02 | 04 | 03 | 23 |
| எறிகணை செலுத்தி | 01 | 01 | — | — | 03 | — | 02 | — | 05 | 02 | 08 | 02 | 24 |
| 106 எம்.எம். ஆர்.சி.எல். | — | — | 01 | — | — | — | — | — | — | — | — | — | 01 |
| 40 எம்.எம் எறிகணை | — | — | 49 | 29 | 18 | 06 | 16 | 48 | 42 | 104 | 75 | 14 | 401 |
| ஆர்.பி.ஜி. எறிகணை | 06 | 08 | 14 | — | 13 | — | — | 05 | 16 | 178 | 45 | 13 | 298 |
| மோட்டர் எறிகணை | 20 | 06 | — | — | 35 | — | 20 | — | 115 | 240 | 251 | 65 | 752 |
| 106 எம்.எம். ஆர்.சி.எல் எறிகணை | — | — | 05 | — | — | — | — | — | — | — | — | — | 05 |
| கைக்குண்டு | 26 | 36 | 62 | 34 | 73 | 31 | 162 | 47 | 118 | 291 | 103 | 99 | 1082 |
| றைஃபிள் கிரனேட் | — | — | — | — | — | — | — | 01 | 10 | — | 53 | — | 64 |
| புகைக்குண்டு | — | — | — | — | — | — | — | 04 | 07 | — | 04 | 01 | 16 |
| வெளிச்சக்குண்டு | — | — | 03 | — | — | 01 | 05 | 02 | 29 | 35 | 85 | — | 160 |
| வோக்கி ரோக்கி | 01 | 01 | — | 01 | — | — | — | 04 | 01 | 01 | — | — | 09 |
| மொபைல் செற் | 03 | 04 | 04 | 01 | — | 02 | 02 | 01 | 01 | 02 | 01 | — | 21 |
| செற் | — | — | — | — | 01 | — | — | — | 01 | — | 02 | 02 | 06 |
| திசைகாட்டி | 02 | — | — | — | 01 | — | — | 01 | 01 | — | — | — | 05 |
| பைனாக்குலர் | 02 | 02 | 01 | — | 01 | — | 01 | 02 | — | 07 | 04 | — | 20 |
| இரவுப்பார்வைச் சாதனம் | — | 01 | — | — | — | — | — | — | — | — | 02 | — | 03 |
| ஸ்கோப் | 01 | 01 | — | — | 01 | — | 01 | 01 | 03 | 17 | 07 | 01 | 33 |
| 7.62×39 எம். எம். ரவை (இன்ரர் மீடியம்) | 10290 | 15873 | 36420 | 4796 | 25482 | 6110 | 23122 | 17765 | 49839 | 34145 | 108954 | 34747 | 367543 |
| 7.62×51 எம். எம்- ரவை (நேட்டோ) | 455 | 90 | 381 | 729 | 2527 | 291 | 2598 | 2218 | 1056 | 28167 | 14722 | 340 | 53574 |
| 7.62×54 எம். எம். ரவை (பி.கே.ரவை) | — | 2668 | — | 128 | 500 | — | — | — | — | 585 | — | — | 3881 |
| 0.303 ரவை | 75 | — | 10 | — | 2229 | 1707 | 1562 | 10 | — | — | — | — | 5593 |
| 5.56 45 எம். எம். ரவை | — | 2845 | — | 1627 | 1051 | 1192 | 286 | 22 | 274 | 221459 | 5861 | 578 | 235195 |
| 9×19 எம். எம். ரவை | — | — | — | — | — | — | — | 16 | — | — | — | — | 16 |
| 50 கலிபர் ரவை | — | 1378 | 2692 | — | — | — | — | 1000 | — | 19338 | — | — | 24408 |
| 14.5 எம். எம். ரவை (Z.P.U. ரவை) | — | — | — | — | — | — | — | — | 2689 | — | — | — | 2689 |
| கொல்லப்பட்ட படையினர் | 101 | 124 | 127 | 83 | 185 | 143 | 186 | 75 | 136 | 77 | 109 | 33 | 1379 |

www.eelamview.com

www.eelamview.com



# மேஜர் அபயன்

சிவகுமாரின் சுபாவம் இப்படித்தான் அமைந்திருந்தது. அயலில் உள்ளவர்கள் யாராவது. ''தம்பி, ஒருக்கா கடைக்குப் போட்டு வாறியே''? - ''ஓம்''. காசையும் பையையும் வாங்கிக்கொண்டு புறப்பட்டு விடுவான். தெருவில் யாராவது ஒருவர் விபத்தில் சிக்கினாலோ, யாரும் விழுந்துகிடந்தாலோ அந்தஇடத்தில் அவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையளிப்பதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. அவர்களைக் கொண்டுபோய் வீட்டில் ஒப்படைப்பதுவரை தானே நின்று செய்தால்தான் இவனுக்குத் திருப்தி.

இவன் மிகவும் அமைதியானவன். குடும்பத்தில்கூட, யாரையுமே தனக்காகச் சிரமப்படுத்த இவன் விரும்புவதில்லை. இப்படியான இவனுக்குள் பின்னாளில் ஒரு பூகம்பமே கிளர்ந்தெழும் என்று, யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

சரித்திர நாவல்களைப் படிப்பதில் இவனுக்கு ஆர்வம் மிகுதி. 'தமிழரின் பெருமை எத்தகையது, தமிழரின் வீரம், புகழ் எங்கெல்லாம் பரவியிருந்தது... இன்று ஏன் இப்படி... ? இந்த நிலைமையை மாற்றியமைக்கும் காலம் பிறந்துள்ளது. அதில் நிச்சயம் நானும் ஒரு பங்காளனாய்......' இவ்வாறாக அவன் மனது அடித்துக் கூறியது. எண்ணங்கள் செயலை நோக்கித் தள்ளின. ஒட்டமென்றும் நீச்சலென்றும் தன்னைத் தயார்ப்படுத்தி வந்தான் இவன்.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் இந்தப் பூவைப் புயலாக மாற்றியது. தேடித்திரிந்தான் புலிகளைச் சந்திக்க. இவனது சொந்த இடம் தெல்லிப்பழை. அந்தக் காலத்தில் தடுக்கி விழுவதானால்கூட ஒரு 'புளொட்' உறுப்பினரின் மேல்தான் விழவேண்டும். அப்படியான நிலைமை இருந்தது தெல்லிப்பழையில். ''உம்'' என்று சொன்னால் படகுகளில் ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்குச் செல்ல எத்தனையோ இயக்கங்கள். ஆனாலும் இவனுக்குச் சம்மதமில்லை. வடிகட்டல் முறையில் போராளிகளை உள்வாங்கும் புலிகளை மட்டுமே பிடித்திருந்தது.

இவனுக்கும் மற்றும் சில நண்பர்களுக்கும் புலிகளின் தொடர்பும் கிடைத்தாயிற்று. எனினும். உள்வாங்குவதில் சலிக்க வைக்கும் தாமதம்; தரப்படும் வேலைகளோ யானைப் பசிக்கு சோளன்பொரி போல. ''எங்களாலும் நிறைய சாதிக்கமுடியும் - அதுவும் இப்போதே'' - தீர்மானித்துவிட்டார்கள் அவர்கள். எங்கெங்கோ திரிந்து 'டைனமைற்'றுக்குத் திரி வைத்து (பைப்பில்) குண்டுகள் செய்வது முதல், மேலும் சில விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள்.

1984 ஆம் ஆண்டு - காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையில் வெடிப்பொருள்களுக்குப் பாதுகாப்பாகச் சென்றுகொண்டிருந்தனர் காவலர்கள். அவர்களிடம் 4 றிப்பீற்றர் துப்பாக்கிகளும் இருந்தன. அவற்றினையும் வெடிப்பொருட்களை வெடிக்கவைக்கும் கருவியையும் கைப்பற்றுவதற்காய் சிவகுமாரும் நண்பர்களும் காத்திருந்தனர். இவர்களிடம் இருந்ததோ ஒரேயொரு வேட்டைத் துப்பாக்கி - சில கைக்குண்டுகள் (கொளுத்தி எறிபவை).


'ஜீப்' மறிக்கப்பட்டது. கைக்குண்டுடன் சிவகுமார் — ஒருவன் துப்பாக்கியுடன் —மற்றவர்கள் பின்னால். நான்கு காவலர்களும் கைகளை உயர்த்திவிட்டனர். நான்கு றிப்பீற்றர்களும் இவர்கள் வசமாயிற்று. எக்ஸ்புளோடரையும் மற்றும் பொருட்களையும் கைப்பற்றிக்கொண்டு ஜீப்பிலே திரும்பிவிட்டனர்.

இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் இயக்கக் கட்டுப்பாட்டை மீறிச் சுயமாக நடந்துள்ளார்கள். தவறுதான். ஆனால், இவர்களை நெறிப்படுத்த முடியும் — அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டு, இவ்வாறு தீர்மானித்தார்.

ஒரு விடயத்தில் வெற்றி -அது அவர்களை உற்சாகப்படுத்தியது. மேலும் கைக்குண்டுகளைச் செய்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக கைக்குண்டு வெடித்தது. சிவகுமாரின் உடலெங்கும் பாரதூரமான காயம் — நெஞ்சுப் பகுதியைப் பார்க்க பயங்கரமாக இருந்தது. இப்படியொரு நிலை வருமென்று எவருமே எதிர்பார்க்கவில்லை. சுமார் இருபது நாட்கள் — அதை இருபது வருடங்கள் என்றுகூடச் சொல்லலாம். அப்படியான வேதனைகளை இவன் அனுபவித்தான். இவனது அண்ணன்தான் இப்போது இவனைப் பராமரித்து வந்தார். இராணுவத்தினரின் முற்றுகைகள் நிகழும்போது, தம்பியைத் தூக்கிக்கொண்டு ஓடுவதும், வைத்தியம் செய்வதுமாக இந்த இருபது நாட்களும் கடந்தன. ''இயக்கத்திற்குக் கட்டுப்படாமல் நடந்ததால் இயக்கம் இவனைப் பொறுப்பெடுக்க மாட்டாது'' என்று ஊரில் கதை உலாவியது, அப்படியானால் இவன் கதி ......? அச்சத்துடன் கடந்தன அந்த நாட்கள்.

விஷயத்தைக் கேள்விப்பட்டார் கிட்டு. ''அவன் இயக்கமில்லையெண்டு ஆர் சொன்னது? அவன் இயக்கந்தான்'' என்றபடியே அவனை நோக்கி விரைந்தார் அவர். அப்போதுதான் உயிரே வந்தது அவனை நேசித்தவர்களுக்கு. அவனது நிலைமையைப் பார்த்ததும், ''ஏன் இந்த வேலை? என்னட்டக் கேட்டிருந்தா திறமான குண்டுகள் தந்திருப்பனே..'' என்று கூறி, அவனது பயத்தைப் போக்கி, உற்சாகப்படுத்தினார். வைத்தியத்திற்காக சிவகுமார் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டான். அங்குதான் அவன் அபயன் ஆனான். அவனுக்குப் பிடித்தமான 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் ஒரு பாத்திரம்தான் அபயன்.

* * *



**மேஜர் அபயன்**

**(கிருஷ்ணமூர்த்தி சிவகுமார்)**

தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 30. 04. 1962 | 1. 12. 1992 |

வைத்தியத்தை எதிர்பார்த்துத் தமிழகம் சென்ற இவன், பிறருக்கு வைத்தியம் செய்யக்கூடியவனாக இந்த மண்ணிற்குத் திரும்பினான். இவனது சேவையை மட்டக்களப்பு-அம்பாறைப் பிராந்தியம் எதிர்பார்த்தது. 1987 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதமளவில் இவன் மட்டக்களப்பு மண்ணில் கால்வைத்தான். அன்றிலிருந்து, 1992 ஆம் ஆண்டின் இறுதியில் வீரச்சாவடையும் வரை, மட்டக்களப்புப் பிராந்தியத்திலேயே இவன் பணிபுரிந்தான்.

மட்டக்களப்பில் இவனது முதல் அனுபவம் மறக்கமுடியாததாக இருந்தது. சிவத்தப்பாலம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த எமது அலுவலகத்தின்கீழ், ஏற்கெனவே தீர்மானித்தபடி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஒரு நாள் காலை 5.00 மணியளவில் முறக்கொட்டாஞ்சேனை, ஏறாவூர், கரடியனாறு ஆகிய மூன்று முகாம்களிலிருந்தும் புறப்பட்ட சிறீலங்காப் படையினர், இந்த அலுவலகத்தை முற்றுகையிட-விரைந்தனர். இந்த முற்றுகையிலிருந்து போராளிகள் தப்பமுடியாதவாறு, பொத்தானை என்ற இடத்தில் உலங்குவானூர்தி மூலம், படையினர் இறக்கப்பட்டிருந்தனர் சண்டை தொடங்கியது. அலுவலகத்தை விட்டுப் போராளிகள் பின்வாங்கினர். வெற்றிகரமான முற்றுகை என நினைத்தவாறே படையினர் அலுவலகத்தைக் கைப்பற்றினர். இதேவேளை உலங்குவானூர்திமூலம் இறக்கப்பட்ட படையினர். எமது முற்றுகைக்குள்ளாகினர். அங்கிருந்து அவர்கள் தப்புவதே பெரும் போராட்டமாகியது. பகல் 11.30 மணியளவில், எமது அலுவலகத்தினுள் இருந்த கண்ணிவெடி வெடிக்கவைக்கப்பட்டது. அலுவலகம் தரைமட்டமாகியது. அதற்குள் தங்கியிருந்த விசேட அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்ரர் கருணரத்னவும் மேலும் மூன்று படையினரும் பலியாகினர். இத்தாக்குதலில் கலந்துகொண்டவர்களில் அபயனும் ஒருவன். இம்முற்றுகைக்கு வந்த இன்னொரு அணியினர்மீதும் கண்ணிவெடித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. சிறீலங்காப் படையினரது திட்டங்கள் தவிடுபொடியாகின. மொத்தம் 7 படையினர் கொல்லப்பட்டதாகவும் 9 படையினர் காயமடைந்ததாகவும் சிறீலங்காப் படையினர் ஒப்புக்கொண்டனர். அதன் பின் அந்த இடத்தைப்பற்றி படையினர் இவ்வாறு கூறினர்: ''அது சிவத்தப்பாலம் இல்லே, ரத்தப் பாலம்''.

* * *

1987 ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டிருந்த காலத்தில், இவன் யாழ்ப்பாணம் வந்திருந்தான். அதுதான் யாழ்ப்பாணத்திற்கான இறுதிப் பயணம் என்று உணர்ந்திருந்தானோ என்னவோ? உறவினர்கள், நண்பர்கள் என்று ஒருவரது வீட்டினையும் தவறவிடவில்லை இவன். அப்போது, பொதுவாக எல்லாத் தாய்மாருக்கும் இருக்கும் எதிர்பார்ப்பே இருந்தது இவனது அன்னைக்கும். ''டேய்.... எனக்கு கொள்ளி வைக்கிற கடமை இருக்கடா உனக்கு'' என்றார். இவன் அமைதியாகச் சிரித்தான். ''ஏன்...... வேறை ஆரும் கொள்ளி வைச்சா இந்தக் கட்டை எரியாதோ''? - பயணமாகிவிட்டான் மட்டக்களப்புக்கு. ஏனெனில். இந்தியப் படையுடன் போர் தொடங்கிவிட்டது. இனி யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க முடியாது. மட்டக்களப்பு இவனை எதிர்பார்க்கிறது.

அங்கு இவன் சென்ற நாளிலிருந்து, வீரச்சாவெய்திய நாளிற்கு இடைப்பட்ட இந்தக் காலத்தில், அவனிடமிருந்து வீட்டிற்கு வரும் கடிதங்களெல்லாம் ''நான் சுகம். வீட்டிற்கு வரும் போராளிகளை நன்கு கவனிக்கவும்'' என்றே இருக்கும்.

இந்திய இராணுவத்தினருடனான போர் நிகழ்ந்த காலத்தில் அபயனின் போராட்டப் பங்களிப்பை, மட்டக்களப்புப் போராளிகள் என்றுமே மறக்கமாட்டார்கள். எத்தனையோ முற்றுகைகள் - ஆனாலும் இவன் உறுதியாக இருந்தான்.

தொடர்ச்சியான முற்றுகைகள் போராளிகளைத் தளர்ச்சிகொள்ளச் செய்யும். அப்போதெல்லாம் இவன் அவர்களை உற்சாகப்படுத்துவான்-

'ஓராயிரம் ஆண்டுகள்
ஆகட்டுமே .. நம்
பொறுமையின் பொருள்
மட்டும் விளங்கட்டுமே
வரும் காலமெல்லாம்
நம் பரம்பரைகள் .. நாம்
அடிமையில்லை என்று
முழங்கட்டுமே''.

இக் காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் மகா ஓயாப் பகுதியில் பயிற்சி முகாம் ஒன்றையும் அமைத்திருந்தான் இவன். அங்கு போராளிகளுக்கு அடிப்படைப் பயிற்சியினை மட்டுமே வழங்க முடிந்தது. துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்குப் போதிய ரவைகள் இருக்கவில்லை. பயிற்சியின் அடுத்த கட்டம், ஒரு முகாமைத் தாக்குவது எப்படியென்பது பற்றிய செயல்முறை விளக்கம் - அது அடுத்தநாள் நடைபெறவிருந்தது. ஆனால், அன்று அதிகாலையில் இந்திய இராணுவத்தினர் அந்த இடத்தை முற்றுகையிட்டுவிட்டனர்.

புதிய போராளிகள் - அனுபவமில்லாதவர்கள் - எனினும், தான் கற்பித்த மாதிரியே அவர்களை நடக்கப்பண்ணினான். அங்கு நின்ற தோழன் ஒருவனிடம், அவர்களைக் கூட்டிக்கொண்டு ஆற்றின் வழியாக இறங்கித் தப்புமாறு கூறிவிட்டு, வேந்தன் என்ற போராளியுடன் இணைந்து இந்திய இராணுவத்தினரின் முன்னேற்றத்தைத் தடுத்துக்கொண்டிருந்தான். அபயன் சுட்டுக்கொண்டிருக்கும்போது வேந்தன் பின்வாங்குதல்; பின்பு, வேந்தன் சுட்டுக் கொண்டிருக்க அபயன் பின்வாங்குதல் — சுமார் 15 நிமிட நேரம் இச்சண்டை நீடித்தது. இதற்கிடையில் ஏனையவர்கள் தப்பிவிட்டனர். சண்டையின் இறுதியில், இறந்த தமது சகாக்களினது சடலங்களை மட்டும் தூக்கியவாறு இந்தியப் படை சென்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)




www.eelamview.com

www.eelamview.com



# மேஜர் அபயன்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் இவனது போராட்ட வாழ்வு தம்பிலுவில் — திருக்கோயில் பகுதியில் தொடர்ந்தது. ஒரு வைத்தியனாக — ஒருதாதியாக — ஒரு போர்வீரனாக — குழுத் தலைவனாக இவனது வாழ்வு தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் றொபேட் என்ற போராளிக்கு கையில் கண்ணிவெடி வெடித்து விட்டது. அப்போது மயக்க ஊசியும் இல்லை; தேவையான வைத்திய உபகரணங்களும் இருக்கவில்லை. தொடர்ச்சியான முற்றுகைகளில் பலவற்றை இழந்தாயிற்று. எனவே றொபேட்டிடம், ''தம்பி! நோகுந்தான்; என்ன செய்யிறது? சமாளி'' என்று கூறிவிட்டு, கம்பி வெட்டும் கருவியினாலேயே சிதறிய விரல்களை வெட்டியெடுத்தான். அந்தக் காலத்தில் இவனது வைத்தியம் தான் எத்தனையோ போராளிகளின் உயிரினைக் காப்பாற்றியிருக்கிறது.

இக்காலத்தில், அன்ரனி தலைமையில், வளத்தாப்பிட்டியில் மூன்று 'ஜீப்'புகளில் வந்த இந்தியப் படையினர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில், இவன் பங்குகொண்டான். இந்தியப் படை அம்பாறையை விட்டு வெளியேறியதும், திருக்கோயிலில் தேசவிரோதிகளின் முகாம்மீதான தாக்குதலில் பங்குபற்றினான். அப்போது அத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய அன்ரனி, ''எனக்கு ஏதாவது நடந்தா, அபயன் சொல்லுற மாதிரி நடவுங்கோ'' என்று போராளிகளுக்கு அறிவுறுத்தினான். அத்தாக்குதல் மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்தது. இந்தியப் படையினரின் திட்டங்கள் தோல்வியைத் தழுவின.

மேலும் பல தாக்குதல்கள் — அதிலும் நரிப்புல் தோட்டம் வழியாக வந்த தேசவிரோதிகளினை, மிகக் குறைந்த எண்ணிக்கையான போராளிகளுடன் நின்று வெற்றி கொண்ட தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

* * *

சிறிலங்கா அரசுடனான இரண்டாவதுஈழப்போர் தொடங்கியதும்இவன் களுவாஞ்சிக்குடி காவல் நிலையத்தின்மீது தாக்குதல் தொடுத்தான். அந்தக்காவல் நிலையத்தினைக் கைப்பற்றியதும் ஏனைய போராளிகளிடம் கூறினான்; ''84ஆம் ஆண்டு இந்தப் பொலீஸ் ஸ்ரேசனை அடிக்க வந்துதான் பரமதேவாவையும் ரவியையும் இழந்தம். இண்டைக்கு இதைக் கைப்பற்றிக் காட்டியிருக்கிறம்''.

தொடர்ந்து பல தாக்குதல்கள்-பல பொறுப்புகள். இப்போதெல்லாம் சிறிலங்காப் படையினர் தேடும் முக்கிய புள்ளிகளில் இவனும் ஒருவனாகிவிட்டான். மட்டக்களப்பில் தேடப்படும் 12 பேரில் இவனது பெயரையும் சிறிலங்கா அரசு அறிவித்திருந்தது.

அப்போதெல்லாம் அங்குள்ள போராளிகள் இவனது குடும்பத்தைப் பற்றி விசாரிப்பார்கள். ''எனக்கு வீடும் இல்லை; சொந்தமும் இல்லை. எல்லாமே நீங்கள் தான்ரா'' என்பான். முகாமில், போராளிகளுக்குத் தேவையான எல்லா உணவு வகைகளையும் தேடிக் கொடுப்பான். தான் மட்டும் மரக்கறி வகையையே உண்பான். கேட்டால், ''எனக்கு அதில விருப்பமில்லை'' என்பான். ஆனால், அவன் வீரச்சாவெய்தியதும்தான் அவன் ஒரு பிராமணப் பையன் என்பது அனைவருக்கும் தெரியவந்தது. தனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களுக்குக் கூட இவன் இதைப்பற்றிக் கூறவில்லை.

அன்று விளாவெட்டுவானில் சிறிலங்காப்படையினர் தாக்கியபோது, இவனை நாம் இழந்தோம். ஆயினும், அங்குள்ள போராளிகளுக்கு இவன் பாடும் பாடல்கள்நினைவில் உள்ளன.

''வரும் காலமெல்லாம் நம்
பரம்பரைகள்
நாம் அடிமையில்லை என்று
முழங்கட்டுமே!''

— கிறேக் ❋

# ஆமிவருகுது.....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசும் வருகுது......' என்பதோடுநிறுத்தாமல், 'இனியென்ன வான்படைதானே' என, மக்கள் இன்பக்கனவு காண்கிறார்கள்.

* * *

அணிநடை திருநெல்வேலிச் சந்தியால் திரும்பி-மருத்துவ பீட வீதி வழியாக, மருத்துவ பீட மைதானத்தை அடைகின்றது. மைதானத்தைச் சூழவும் மக்கள் சமுத்திரம், அதன் சுற்றாடலில் கனரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுடன் புலிகளின் நிலைகள்.

இதே மருத்துவபீட மைதானத்திற்குள் சில ஆண்டுகளுக்கு முன், பெரும் இராணுவ சாதனையை நாம் படைத்திருந்தோம்.

1987 இல், எமது தாயக விடுதலைப் போரை அழித்துவிடும் வஞ்சக நோக்கோடு இங்கு வந்த இந்தியப் படை, 72 மணி நேரத்தில் புலிகளை அழித்து விடுவோம் என்ற இறுமாப்புடன் எம்மீது போர்தொடுத்தபோது, இதே மைதானத்தில் இந்தியப் படையணி ஒன்று, முழுமையாகவே அழிக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் இருப்பிடத்தைத் தாக்கி, அவரைக் கொல்வதற்கென்று இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்திகள்மூலம் தரையிறக்கப்பட்ட, 30 பேர் கொண்ட சிறப்புப் படையணியே இதுவாகும். இந்தியப் படைக்கு விழுந்த முதலாவது பேரிடியாகவும் அது அமைந்தது.

* * *

விடுதலைப் புலிகள் படையணிகளினதும், தமிழீழ காவல் துறையினதும் அணிவகுப்பு மரியாதை செலுத்தும் நிகழ்வு மைதானத்தில் நடந்துகொண்டிருந்தது. எமது இயக்கத்தின் படைத்துறைத் துணைத் தளபதி திரு. பால்ராஜ் அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்கிறார். அவருக்குப் பின்னால் வரிசையாக ஏனைய தளபதிகள்.

திடீரென வானத்தைக் கிழித்துக்கொண்டு வந்து வட்டமிடுகின்றன இரண்டு குண்டு வீச்சு விமானங்கள்; மக்கள் பதற்றமடைகின்றனர்.

பொம்மர்கள் திரும்பத்திரும்ப வட்டமிட்டு குண்டுவீசுவதற்கான வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கும் போதும் அணிநடை குழப்பமின்றி நடக்க - தளபதிகளும் இயல்பாகவே; ஆனால் கலிபர்கள் தயாராக.

திடீரென, பொம்மர்களில் ஒன்று மேலே கிளம்பி, வேகத்தைக் கூட்டிக் குத்திக் கொண்டு பதிந்து குண்டுவீசவர, பதற்றமடைந்த மக்கள் குழம்பிச் சிதறி ஓட முயல - வானத்தை நோக்கி ரவைகளைப் பொழிந்தன 'பிப்ரிகள்'. சில மணித்துளிகளில், தொடர்ச்சியான பிப்ரிகளின் சடசடப்பு ஓய, விமான இரைச்சல் வாவிலிருந்து கேட்கவில்லை.

உடலைப் புல்லரிக்க வைத்து, மனதைப் பெருமிதம்கொள்ளவைத்தன அந்தக் கணங்கள்.

மீண்டும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் குழும, அணிவகுப்பு மரியாதை தொடர்கிறது.

இன்று, வான்வழி வந்து எங்கள் எழுச்சி விழாவை உடைக்க வந்தவர்கள் விரட்டப்பட்டனர்.

ஆனால், ஏறக்குறைய 19 ஆண்டுகளுக்கு முன், யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழிக்கு எடுக்கப்பட்ட எழுச்சி விழாவின்போது நடந்ததை எவரும் மறக்க முடியாது.

1974 ஆம் ஆண்டு, சனவரி 10.
அது ஒரு கொடிய நாள்.

கல்விமான்கள், அறிஞர்கள், கலைஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் என தமிழ்ப் பெருங்குடி மக்கள் திரண்டு யாழ்ப்பாணம் வந்து, வீரசிங்கம் மண்டபத்தில் கூடியிருந்தனர்.

கோலாகலமாக, நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் நடந்துகொண்டிருந்தன.

ஒரே ஒரு ஜீப் வண்டியில்தான் சிங்களப் பொலிசார் வந்திறங்கினர். ஒருசில பேர்தான் அவர்களில் இருந்தனர். ஆனால் அனர்த்தம் - அட்டூழியம் - எங்கும் அவல ஓலம். மின்சாரக் கம்பிகளைச் சுட்டு அறுத்துச் சனக்கூட்டத்தின் மேல் வீழ்த்தினார்கள். கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினார்கள். அல்லோல கல்லோலப்பட்டு ஓடிய சனக்கூட்டத்தினுள் நெரிந்தும், மின்சாரம் தாக்கியும் ஒன்பது தமிழர்கள் பிணங்களாய்ச் சுருண்டார்கள்.

அன்று 1974ஆம் ஆண்டு நடந்ததும் ஒரு எழுச்சி விழா; இன்று 1992ஆம் ஆண்டு நடந்ததும் ஒரு எழுச்சி விழா. அது அவர்களின் காலம்- மக்களைக் கொன்றார்கள்.

இது புலிகளின் காலம் - மக்களைக் காத்தார்கள்.

எவ்வளவு துரிதமாக - எவ்வளவு தூரத்திற்கு-விடுதலைப்போராட்டம் வளர்ந்துவிட்டது!

''மூன்று மாதத்தில் புலிகளை அழித்து விடுவோம்'' எனக் கர்ச்சித்தவர்களை, ''புலிகள் பங்குபற்றாமல் பிரச்சினைக்கு ஒரு தீர்வை நடைமுறைப்படுத்த முடியாது'' என வாய்திறந்து சொல்லவைத்திருக்கின்றது, புலிகளின் வீரம்.

ஒரு தனி அரச நிர்மாணத்தை நோக்கி எமது போராட்டம் விரைந்து செல்கின்றது.

படையமைப்பு, காவற் துறை, புலனாய்வு, அரசியல், நீதி நிர்வாகம், மகளிர் விவகாரம், பொருளாதாரக் கட்டுமானம், கலை - பண்பாடு, தகவல்துறை, நிதிக்கட்டமைப்பு, பொது நிர்வாகம், போக்குவரத்து என, ஒரு அரசிற்கு இருக்கவேண்டிய அம்சங்களை நோக்கிப் படிப்படியாகப் பரிணமித்து - எங்கள் வீரர்கள் ஊற்றிய இரத்தத்தில் உரம் பெற்று - எங்கள் தலைவனின் உன்னத வழிகாட்டலில் நெறிப்படுத்தப்பட்டு, உலகையே வியப்பிலாழ்த்தி நெடிது நிமிர்கிறது எங்கள் தாயக விடுதலைப் போர்.

உலகெங்கும் எதிரொலிக்கின்றது எமது போர்க்குரல்! ❋

# வெற்றியின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நடவடிக்கை ஆரம்பித்த போது ''இதனை எதிர்கொள்ளும் பலம் புலிகளுக்கு உண்டு'' என்றது பி.பி.சி. இந் நடவடிக்கை முடிந்தபோது ''கிழக்கில் ராணுவம் மேலோங்கிய நிலையில் இருக்கின்றது என்ற கணிப்பீடு கேள்விக்கு உள்ளாகி விட்டது'' என்றார், 'ஐலன்ட்' பத்திரிகை எழுத்தாளர் சாமிந்ரா பெர்னான்டோ. பெயர் குறிப்பிடவிரும்பாத படை அதிகாரி ஒருவர் ''இந்நடவடிக்கையின்போது, புலிகளின முகாம்களில் ஒன்றைத்தானும் கைப்பற்ற முடியவில்லை. அத்துடன் புலிகளை எவ்விதத்திலும் பாதிப்பிற்கு உள்ளாக்கவில்லை'' என அதிருப்திப்பட்டார்.

இதேபோன்று இப்போராண்டில், ''கிழக்கிலிருந்து புலிகளை அப்புறப்படுத்த'' வென பாரிய நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அதில் ஒன்றுதானும் படையினர் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை என்பது, அனைவரும் அறிந்த உண்மை.

## தமிழீழத்தின் இதயத்தைப் பாதுகாத்த சமர்கள்

தமிழீழ தேசத்தைத் துண்டாடி, எமது விடுதலைப் போராட்டத்தின் மூலக்கருவைச் சிதைத்து விடவென, இவ்வருடத்தில் மூன்று இராணுவ நடவடிக்கைகளை சிங்களப் படைத்தலைமை மணலாற்றின் மீது செய்தது. ஆனால் இந்த நடவடிக்கைகளை எமது வீரர்கள் முறியடித்து வீரசாதனை புரிந்தனர்.

முதலாவது நடவடிக்கை 'கயே பகர' என்று பெயரிடப்பட்டு 17-3-92இல் ஆரம்பித்தது. கொக்குத்தொடுவாயிலிருந்து நாயாறு நோக்கிச் செல்வதை நோக்கமாகக்கொண்டு, முப்படைகளும் இணைந்து இந்த நடவடிக்கையைமேற்கொண்டன. கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் கமில்டன், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில், வட பிராந்திய தளபதி மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ ஆகியோரின் மேற்பார்வையில் பிரிகேடியர் றொகான் தலுவத்த இந்நடவடிக்கைக்குத் தலைமை தாங்கினார். போர்த் தாங்கிகள், கவச வண்டிகள், போர்விமானங்கள், உலங்குவானூர்திகள், பீரங்கிப் படகுகள், பீரங்கிகள் சகிதம் 3000 படையினர் இதில் ஈடுபடுத்தப்பட்டனர். இரண்டிற்கு மேற்பட்ட முனைகளால் முன்னேற முற்பட்ட படையினரை எதிர்கொண்டு போராடிய எமது வீரர்கள், 8ஆவது நாள் படையினரை முறியடித்து, பின்வாங்கச் செய்தனர்.

3 அதிகாரிகள் உட்பட குறைந்தது 50 படையினர் கொல்லப்பட்டதுடன், ஆர். சி. எல். பீரங்கி, கனரக '50 கலிபர்' ஆகியன உட்பட 23 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. யுத்ததாங்கிகள், கவச வண்டிகள் என 6 படை வண்டிகள் நொருக்கப்பட்டன. இச் சமர் நடந்துகொண்டிருந்த போது, ''சமீபகால மோதல்களை விட மூர்க்கமான போர் இப்போது மணலாற்றில் நடைபெறுகிறது'' என்றார், சிங்களப் படைத்தளபதி கொப்பேகடுவ, இதன் பின்னர், 28 - 5 - 92 அன்று, 'சத்பலய' எனப் பெயரிட்டு முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மணலாற்றை நோக்கிய இராணுவ நடவடிக்கை ஒன்று செய்யப்பட்டது. கடலிலிருந்து பீரங்கிக் கப்பல், போர்ப் படகுகள் என்பனவும், வானிலிருந்து குண்டுவீச்சு விமானங்கள், 'சுப்பசொனிக்'குகள், உலங்குவானூர்திகள் என்பன நடாத்திய கடும் தாக்குதலின் உதவியுடன் 2,500 துருப்புக்கள், T. 56 ரக தாங்கிகள் உட்பட 40 வண்டிகளுடன் முன்னேறினர்.

5 நாட்களாக புலிவீரர்கள் மேற்கொண்ட சளைக்காத தாக்குதலில் 3 கவச வண்டிகள் நொருக்கப்பட்டதுடன், பல படையினரும் கொல்லப்பட்டனர். இராணுவ நகர்வு அளம்பில் சந்தியுடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

பின்னர், மீண்டும் 8 - 6 - 92 அன்று 'சத்பலய - 2' எனும் பெயருடன் அளம்பில் சந்தியில் தரித்திருந்த படையினர் முன்னேறினர். இவர்களை எதிர்கொண்ட புலிவீரர்கள் கடுமையான எதிர்த்தாக்குதலை நிகழ்த்தினர். படையினரின் கவச வண்டி ஒன்று சிதறியது. அவர்களின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டு, படையினர் அளம்பிலிலேயே தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தனர்.

இச் சமர்கள் முடிந்த பின் பி.பி.சி. வானொலி ''விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்ப்பைக் காட்டிப் போரிட்டனர். அதனால், இராணுவம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை'' என்றது.

இறுதியாக, அளம்பில்வரை முன்னேறியிருந்த படையினரும் 3 - 11 - 92 அன்று, அங்கிருந்து கடல் வழியாகப் பின்வாங்கிச் சென்றுவிட்டனர். ❋

www.eelamview.com

www.eelamview.com



## ஆமிவருகுது... நேவிவருகுது... பொலிஸ்வருகுது...

# இனியென்ன... வான்படைதானே!

நொவெம்பர் 27 ஆம் நாள்.

தமிழர்களின் நினைவினில் நீங்காத நாள். நேரம் மாலை 3.00 மணி. மாரிகாலத்து மாலைப் பொழுதாகிலும் மப்பும் மந்தாரமுமற்ற தெளிவான வானம்.

யாழ் - பலாலி வீதியைக் குறுக்கறுத்து, கந்தர்மடம் சந்தியால் செல்கின்ற தெரு மக்கள் கடலால் நிறைந்திருந்தது. கந்தர்மடம் பாடசாலைக்கு முன்பாகச் செல்கின்ற அவ்வீதியில் அணிவகுத்து நிற்கின்றன தமிழீழப் படையணிகள்.

முன்னே வரிப்புலிச் சீருடையில் வாத்திய இசைக்குழு. அடுத்து, புலிப்படையின் ஆண்-பெண் போராளிகளின் படையணிகள். அடுத்து கடற்புலிகளின் ஆண்-பெண் போராளிகளின்படையணிகள். தொடர்ந்து ஆண்களும் பெண்களுமாக தமிழீழக் காவல்துறையினர். பின்னால்- '50 கலிபர்' கனரக இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட காவல் வண்டியும் - நவீன ரக ஆயுதங்கள் தாங்கிய போராளிகளும்.

ஆளை ஆள் விலக்கி ஒருவரை ஒருவர் முந்தி, அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக்காண முண்டியடிக்கின்ற சனக்கூட்டம். வீதி நிறைந்து- மதில்கள், மரங்கள் நிறைந்து - வீட்டுக் கூரைகளிலும் ஏறி - எங்கும் மக்கள்.

கந்தர்மடம் பாடசாலைக்கு முன்னால் அணிவகுத்து நின்ற எங்கள் படையணிகளின் அணிநடை ஆரம்பமாகி அசையத்துவங்கியது.

உண்மையிலேயே அது தமிழர்களை மேனி சிலிர்க்கவைக்கும் ஒரு காட்சி. எமது விடுதலைப் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியை உலகிற்கு எடுத்துக் காட்டும், ஒரு குறியீடு.

இதே கந்தர்மடம் பாடசாலை -

பத்து வருடங்களுக்கு முன் - அது போராட்டம் துளிர்விட்ட காலம். விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையிலேயே எமது இயக்க உறுப்பினர்கள். இன்றுள்ளதைப் போல அதி நவீன ஆயுதங்கள் அன்றில்லை.

1983 மே 18ஆம் திகதி -

சிறீலங்கா அரசு நடாத்திய உள்ளூராட்சித் தேர்தலுக்கான நாள். தேர்தலுக்கான பாதுகாப்பிற்காக வாக்களிப்பு நிலையங்களில் சிங்களப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். வீதிகளெங்கும் இராணுவ - பொலிஸ் வண்டிகள் ரோந்து சுற்றிக்கொண்டிருந்தன.

அது அவர்களின் காலம்.

கந்தர்மடம் சைவப்பிரகாச மகாவித்தியாலயமும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் ஒன்று.

சீலனின் தலைமையில் சில புலிவீரர்கள் எங்கோ மறைந்திருந்துவிட்டு, திடீரென 3 மிதிவண்டிகளில் வந்திறங்கிப் படையினரைத் தாக்குகின்றனர். ஒருவன் கொல்லப்பட அவனின் ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு, மறுபடியும் மறைந்துவிடுகின்றனர்.

அது நடந்து முழுமையாகப் பத்தாண்டுகள் கூட நிறைவுறாத இன்று -

அப்போது ஒரு சில பேராக, ஒரு சில துப்பாக்கிகளுடன் ஒளிந்து வந்து தாக்கிவிட்டு, மறைந்தோடிப்போன அதே வீதியில்-தமிழீழத் தேசியப் படையமைப்பாக வளர்ந்த புலிப்படையின் அணிவகுப்பு. அணிநடைக்குப் பாதுகாப்பாக, அதி நவீன ஆயுதங்களுடன் புலிவீரர்கள்; '50' கலிபர் கனரக இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட வண்டி.

அன்றைய சிறிய தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய, எமது முதலாவது தாக்குதற் பிரிவுத் தளபதி சீலனின் நினைவோடு இன்று எழுந்து நிற்கிறது, எமது முதலாவது மரபுவழிப் போர்அணியான, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவு.

கரும்புலிகள், பெண்புலிகள், கடற்புலிகள், புதிய புதிய சிறப்புப் படைப்பிரிவுகள் என, குறுகிய காலத்திற்குள் எவ்வளவு பெரிய வளர்ச்சி! அப்போது எங்களை வெளியாருக்குத் தெரியாது; இப்போது, நாங்கள் உலகப் பிரசித்திபெற்ற தலைவனைக்கொண்ட பிரபல்யமான இயக்கம் - போர்த்திறனில், வீரத்தில், தியாகத்தில் ... இன்னும் இன்னும் ..

* * *

அணிநடை கந்தர்மடச் சந்தியில் திரும்பி திருநெல்வேலி நோக்கி நகர்கின்றது. எங்கும் சனநெரிசல். வீதி நிறைந்து - மதில்கள் மரங்கள் நிறைந்து - வீட்டுக்கூரைகள், மாடிகள் நிறைந்து - மலையெனக் குவிந்திருந்தனர் மக்கள்.

அணிநடை தபாற்பெட்டியடிச் சந்தியைக் கடந்துகொண்டிருந்தது. சாதாரண வரிச்சீருடையில் புலிவீரர்கள் முன்னால் செல்ல, நீல நிற வரிச்சீருடையில் கடற்புலிகள் அடுத்துச் செல்ல, தமக்குரிய சீருடையில் காவல் துறையினர் இறுதியாகச் சென்றுகொண்டிருந்தனர்.

மக்களுக்குள்ளிருந்து இரண்டு இளைஞர்கள், தமக்குள் பேசிக்கொள்கின்றனர். ஒருவர் அடுத்தவருக்குச் சொல்கிறார்:

''ஆமி போகுது, நேவி போகுது,பொலிசும் போகுது...... இனியென்னடா வான்படை தானே......''

இப்பொழுதுதான் - எமது மக்களுக்கு எவ்வளவு பெரிய நம்பிக்கை!

தமிழீழப் படைகள் அணிவகுத்துச் செல்கின்ற - அதைப் பார்த்து மக்கள் பெருமிதத்துடன் கதைக்கின்ற - அதே தபாற்பெட்டியடிச் சந்தியில் பத்தேவருடங்களுக்கு முன்-

1983 யூலைத் திங்கள் 23 ஆம் நாள்-

எங்கள்தெருக்களில் சிங்களப்படையினர்சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த காலம். தங்களைக் கேட்க யாருமில்லை என்ற இறுமாப்புடன் அவர்கள் உல்லாசமாக உலவித்திரிந்த நாட்களில் ஒரு நாள். எங்கள் இயக்கத்தின் மொத்த ஆட்கள் தொகை ஐம்பதை நெருங்காது. இங்கு ஒளித்து அங்கு ஒளித்துத் தலைமறைவாக வாழ்ந்து - வளர்ந்த காலம். புலிகளை உலகத்திற்குத் தெரியாது. எங்கோ மறைந்திருந்துவிட்டு, இரவானதும் தபாற்பெட்டியடிச் சந்தியில் வந்து,அருகு வீடுகளுக்கு சிங்களப் படை போல நடித்து ஏமாற்றி, கண்ணிவெடியைப் புதைத்து, நள்ளிரவில் பலாலியிலிருந்து ரோந்து வந்த படையினரைத் தாக்கி, 13 பேரைக் கொன்று ஆயுதங்களையும் தூக்கிக்கொண்டு ஓடிமறைந்தபோதுதான், புலிப்படையை உலகம் அறிந்தது.


இலங்கைத் தீவையே அதிரவைத்த அந்தத் தாக்குதல் நடந்த போது - இன்னுமொரு பத்தே ஆண்டுகளில் அதே தபாற் பெட்டியடிச் சந்தியில் தமிழரெல்லாம் திரண்டு வாழ்த்த, தமிழீழத்தின் தேசியப் படையமைப்பாக வளர்ச்சியுற்ற புலிப்படை வீரர்களின் அணிநடை செல்லும் என, யாரும் கற்பனையில்கூடக் கண்டதில்லை. மிகக் குறுகிய காலத்திற்குள் போராட்டம் பிரமாண்டமாக வியாபித்து,உலகின் கவனத்தைத் தனது பக்கம் ஈர்த்துநிற்கும் என, யாருமே நம்பியிருக்கவில்லை.

ஒருசில துப்பாக்கிகளுடன் அன்று யாருக்கும் தெரியாமல், ஒளிந்துவந்து தாக்கிவிட்டு ஒளிந்தோடிப் போன அதே இடத்தில், இன்று மிகப்பெரிய படையமைப்பாகப் பரிணமித்து, நவீனரக ஆயுதங்களுடன் அணிநடை. அப்போது யார் கண்டுவிட்டால் எமக்குப் பிரச்சினையாகிப் போய்விடுமென்பதற்காக சிங்களப் படைபோல நடித்து ஏமாற்றினோமோ, அதேமக்கள்இன்று- அதே இடத்தில் - எமக்குப் பின்னால் மலையெனக் குவிந்து ......

போராட்டம் வளர வளர மக்களின் மனங்களில் நம்பகத்தன்மையும் வளர்ந்தது. அதனால்தான் 'ஆமி வருகுது...... நேவி வருகுது ..

(11ஆம் பக்கம் பார்க்க)





## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com